
காலாண்டு இதழ்
சீறம
டிசம்பர் 2023
படை 01 அணி 03
மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு

**டிசம்பர் 2023**

# சீமை

மாற்றத்தை நோக்கிய மலையகத்தின் குறியீடு

SEEMAI - සීමෙ

**படை 01 அணி 03**


**தொடர்புகளுக்கு**

076 6626754 / 077 2532296

077 2822449 / 077 1193900

**மின்னஞ்சல்**

seemaimagazine@gmail.com



## ஆசிரியர்

சதீஸ் செல்வராஜ்

## ஆலோசகர் குழு

கனேஷன் திலீப்குமார்

கிட்ணன் செல்வராஜ்

ரிச்சர்ட் ரொஹான்


மலையகத்தின் சிந்தனை ரீதியான புத்தெழுச்சிக்கு வலுசேர்க்கும் முயற்சியில் இணைவோம். நமது சிந்தனைகளும் உலகை வளப்படுத்தட்டும். மக்கள் படைப்பாளர்களே இக்களம் உங்களுடையது.



# ஆயிரோம் ரூவா பத்தாது! சம்பளத்த கூட்டு!!

**"இன்னும் எத்தனை காலம் தான்
ஏமாற்றுவார் இந்த நாட்டிலே
சொந்த நாட்டிலே நம் நாட்டிலே நாட்டிலே"** என்ற பாடல் வரிகள் நம் நாட்டு ஆளும் கூட்டத்துக்கும் அவர்களுக்கு கூஜா தூக்கும் மலையக அரசியல்வாதிகளுக்கும் மிகக் கச்சிதமாகப் பொருந்துகிறது. மக்களை ஏமாற்றுதன் மூலம் தம் அதிகாரக் கதிரைகளை தக்கவைத்துக்கொள்ளும் வித்தையில் அவர்கள் தேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு ஏமாற்றப்படுகின்ற மக்கட் பிரிவில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை பாலைவனத்தில் நடப்பட்ட மாங்கன்றை போன்றதாகிவிட்டது. பொருளாதார நெருக்கடியால் நாடு சக்கையாகிக் கொண்டிருக்கும் தருணத்தில் தோட்டத் தொழிலாளர்களோ உக்கிப்போய்க் கொண்டிருக்கிறார்கள். அதனால், இந்த உலகில் தப்பிப் பிழைப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவே வேண்டும்.

1000 ரூபா நாட்சம்பளம் என்பது ரணில் – மைத்திரி ஆட்சியின்போதே காலாவதியாகியிருந்தது. 1000 ரூபா கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்த நேரமே தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு வழங்கப்பட வேண்டிய நியாயமான தொகை 1283 ரூபாவாக இருந்தது. அதற்கடுத்து வந்த கோட்டாபயவின் ஆட்சியின் போது பொருளாதார நெருக்கடி உக்கிரமடைய வாழக்கைச் செலவு அதிகரித்தது. ஆனால், அப்போதும் கூட எல்லா தோட்டத் தொழிலாளர்களுக்கும் 1000 ரூபா முறையாக வழங்கப்படவில்லை. கூட்டு ஒப்பந்தம் வேண்டாம், பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவோம், 20 கிலோ கொழுந்து எடுக்கவேண்டும், அது இது என்று கயிறு கொடுத்து சம்பள விவகாரத்தை இழுத்தடித்தார்கள். ஆனால், தினம் தினம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக்கொண்டே போனது. அது தற்போது குரல்வளையை நெறித்துப் பிடித்திருக்கிறது. ஒருவேளை உணவுடன் வயிற்றைக் கட்டிப்போட்டிருக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் எதிர்காலத்தை காணமுடியாது தோட்டத் தொழிலாளர்கள் பித்துப்பிடித்துப் போயிருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் சம்பள உயர்வுக்காக போராடாமல் மௌனமாக எவ்வாறு திண்ணையில் அமர்ந்துகொண்டிருக்க முடியும்? ஆக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

நிதியமைச்சர் ரணில் விக்ரமசிங்கவினால் அண்மையில் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இது வழமைப்போலவே மாயாஜாலம் நிறைந்திருந்தது. கவர்ச்சிகரமான சொற்கள் ஏராளம் தூவப்பட்டிருந்தன. ஆனால், எங்குத் தேடியும் அதில் மக்களுக்கான நிவாரணத்தை கண்டுகொள்ள முடியவில்லை. மக்களால் புறக்கணிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் குடும்பங்களுக்கு மட்டும் 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இதில் எவ்வித நியாமும் இல்லை என்பதை புதிதாக நிறுவ வேண்டியதில்லை. இருந்தாலும் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளதை கூறத்தான் வேண்டும். அந்த வரவு செலவின்படி, அடுத்த வருடம் மேலும் வரி அதிகரிக்கப்படவிருக்கிறது. அதாவது மிகை வரிச்சுரண்டல் யுத்தத்துக்கு ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கம் தயாராகி வருகிறது. தற்போதைய வரி விதிப்பைக்கூட தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் மக்கள் இருக்கும்போது 18 சதவீதம் வரி என்பது உயிரை உறுஞ்சப்போகிறது.

மின்கட்டணம் மற்றும் தண்ணீர் கட்டணம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அரிசி, மா, சீனி, பருப்பு, பெரிய வெங்காயம் என்று எல்லா உணவுப் பொருட்களின் விலையும் கூடியிருக்கிறது. இலவசக் கல்வி மற்றும் இலவச மருத்துவம் ஆகியவற்றை பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் நிலைமை உருவாகியிருக்கிறது. போதிய போசாக்கில்லாத பரம்பரையாக தோட்டத் தொழிலாளர்களின் வாரிசுகள் மாறியிருக்கிறார்கள். வாரம் வாரம் இறைச்சி சமைக்கும் குடும்பங்களை கூட விரல் விட்டு எண்ணிவிடும் நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறான நிலையில் ஈ.பி.எஃப் மற்றும் ஈ.டீ.எஃப் இலும் அரசாங்கம் கை வைத்துவிட்டது. இப்படி விலைகளை அதிகரிப்பதன் மூலமும் சலுகைகளை துண்டிப்பதன் மூலமும் மக்களிடமிருந்து கோடிக்கணக்கில் பணம் திருடப்பட்டுக் கொண்டிருக்கிறது. செலவு வரம்பு மீறியிருக்கின்ற நிலையில் அதனை ஈடுசெய்யும் அளவிற்கு கூட ஊதியம் உயர்த்தப்படவில்லை. அதனால், நாட்டின் எல்லா திசைகளிலும் சம்பள உயர்வு போராட்டம் உயிர்பெற்று வருகிறது. அதில் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்தாக வேண்டும். நியாயமான சம்பளத்தை பெற்றுக்கொள்ள போராடவேண்டும். பொருளாதார ரீதியாக எம் சமூகம் வீழ்ந்து கிடப்பதனால்தான் எமக்கான வாய்ப்புகள் பலவும் கைநழுவிப் போயுள்ளன. அதனால், குறைந்தபட்சம் 2000 ரூபா நாட்சம்பளத்தை வழங்குமாறு கோரிக்கையை முன்வைப்போம்.

# நாட்டு மக்களுக்கு காது குத்தும் ரணில் விக்ரமசிங்க



**சதீஸ் செல்வராஜ்**

சிதறிக் கிடந்தவர்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஓர் அரசாங்கத்தை அமைத்துக்கொண்டு நாட்டில் தற்போது அரசியல் நெருக்கடியென்றவொன்று கிடையாது என்று நிருவ முயல்கின்றபோதிலும், அரசியல் நெருக்கடியானது பல வடிவங்களையும் எடுத்து நாட்டில் நடமாடிக்கொண்டுதான் இருக்கிறது. இந்த அரசியல் நெருக்கடியானது பொருளாதாரம், சமூகம் எல்லாவற்றிலும் நெருக்கடியை உக்கிரமடையச் செய்திருக்கிறது.

பஸ் நிலையங்களில், முச்சக்கர வண்டி தரிப்பிடங்களில், சலூன்களில், சந்தைகளில், தொழிற்சாலைகளில், கம்பனிகளில் என்று நாட்டின் எந்தவிடத்தை எடுத்துக்கொண்டாலும் மக்களுடைய உரையாடல்களில் பிரதானமானதாக இருப்பது பொருளாதார நெருக்கடியும், அதனால் ஏற்பட்டுள்ள குடும்பப் பிரச்சினை சார்ந்த விடயமாகமும் ஆகும். இந்தப் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இன்று குடும்பத்துக்குள் ஆயிரத்தெட்டு பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. மகிழ்ச்சியை தொலைத்து, தனித்து, மனஅழுத்ததை சுமந்துகொண்டு திரியும் நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. அதனால், நாட்டின் பெரும்பான்மை சனம் இந்தப் பொருளாதார நெருக்கடியானது நாட்டில் நிலவுகின்ற அரசியல் முறைமையின் காரணத்தினால்தான் ஏற்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொண்டிருக்கிறது. அதனால், இதுவரை இலங்கையில் நிலவிய அரசியல் முறைக்கு பதிலாக முற்றிலும் வேறுபட்ட மக்கள் ஆட்சியை நிறுவுவதற்கு மக்கள் தயாராகி இருக்கிறார்கள்.

இதுவரை காலமும் மாறி மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுண ஆகிய கட்சிகளே! இவற்றிற்கு தலைமை தாங்குபவர்களும் குறிப்பிட்டு சுட்டக்கூடிய சில குடும்பங்கள் மாத்திரமே! இக்கட்சிகளில் இருந்து ஒரு கட்சி ஆட்சியதிகாரத்திற்கு வந்தால் எதிர்கட்சியை தக்கவைத்துக் கொள்பவர்களும் இக்கும்பலைச் சார்ந்தவர்களே! இவ்வாறாகத்தான் 75 வருட காலமாக இந்தக் கும்பல் தங்கள் அரசியலை நிலைநாட்டி வந்தார்கள். இவர்கள் மாறி மாறி மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்தார்கள். நாட்டின் வளங்களை விற்றுத்தின்றார்கள். எல்லா நிறுவனங்களிலும் மேல் மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை ஊழல் மோசடியால் நிரம்பி வழிகின்ற

கலாசாரத்தை தோற்றுவித்தார்கள். பணத்தை வீண்விரயம் செய்து திறைசேரியை காலி செய்தார்கள். தங்கள் தேவைகளுக்கென்று வரவு செலவுத் திட்டத்தில் கோடிக்கணக்கில் பணத்தினை ஒதுக்கிக் கொண்டார்கள். தங்கள் உறவினர்களுக்கும், வேண்டப்பட்ட கள்ளவியாபாரிகளுக்கும் இடங்கொடுத்தார்கள். திருட்டுத்தனமாக வெளிப்படைத்தன்மையற்ற கொந்தராத்துக்களில் கைச்சாத்திட்டார்கள். அதிலும் குறிப்பாக டென்டர்ளை அறிவிக்காமல் மேசைக்கு அடியில் டீலை முடித்துக்கொண்டு வெளிநாட்டு பணமுதலைகளுக்கு வளங்களைத் தாரைவார்த்திருக்கிறார்கள். தமது ஊழல் மோசடிகளை மூடிமறைக்கவும் மக்களை அடக்கியாளவும் ஜனநாயக விரோத சட்டங்களை இயற்றிக் கொண்டார்கள். அவர்களை மிஞ்ச இங்கு ஆள் இல்லை என்ற மமதையில் மிதந்தார்கள். ஆனால், தற்போது இவை எல்லாவற்றுக்கும் மக்களால் முடிவுகட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

முன்பு ஆட்சியாளர்களுக்கு மக்கள் பயந்திருந்தார்கள். ஆட்சியாளர்களினால்தான் புவி சுழல்கிறது போன்ற மாயையில் அவர்கள் இருந்தார்கள். சொகுசு

**ஆட்சியாளர்கள் மக்களை பிளவுபடுத்தியதால் வளர்ந்தார்கள். 1948 ஆம் ஆண்டு மலையக மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்ததில் D.S.சேனநாயக்க வளர்ந்தார். 1956 தனிச் சிங்களச் சட்டத்தில் S.W.R.D.பண்டாரநாயக்க வளர்ந்தார். மலையக மக்களை இந்தியாவுக்கு விரட்டியடித்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வளர்ந்தார். 1977 முதல் 1983 வரை கலவரங்களை உருவாக்கி ஜே.ஆர். ஜயவர்தன வளர்ந்தார். 2009 யுத்தத்தை பயன்படுத்தி மஹிந்த ராஜபக்ஸ வளர்ந்தார். ஈஸ்டர் குண்டுவெடிப்பில் கோட்டாபய ராஜபக்ஸ வளர்ந்தார். தற்போது தொல்பொருள் மற்றும் விகாரை விடயங்களை முன்நிறுத்தி ரணில் விக்ரமசிங்க வளரப் பார்க்கிறார்.**



வாகனங்களில் அடியாட்கள் படை சூழ அரசியல்வாதிகள் வீதிகளில் செல்லும்போதும், ஊருக்குள் நுழையும் போதும் பாவப்பட்ட மக்கள் வீதியை விட்டு இறங்கி ஓரத்தில் நின்று கைகட்டி வேடிக்கை பார்த்தார்கள், கோசமிட்டுக் கொண்டாடினார்கள். இதற்கெல்லாம் காரணம் அரசியல்வாதிகள் தங்களை விட பலம் மிக்கவர்கள் என்று மக்கள் எண்ணியிருந்ததால் ஆகும். அதனை பயன்படுத்தி மக்களை அச்சுறுத்தி, ஏமாற்றி ஆட்சியாளர்கள் தங்கள் இருப்பை தக்கவைத்துக் கொண்டார்கள். வளரவும் செய்தார்கள். இவர்கள் காலங்காலமாக எப்படி வளர்ந்து வந்தார்கள் என்பதையும் நாம் பார்த்து செல்வது கட்டாயமானதாகும்.

ஆம்! ஆட்சியாளர்கள் மக்களை பிளவுபடுத்தியதால் வளர்ந்தார்கள். 1948 ஆம் ஆண்டு மலையக மக்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்ததில் D.S.சேனநாயக்க வளர்ந்தார். 1956 தனிச் சிங்களச் சட்டத்தில் S.W.R.D.பண்டாரநாயக்க வளர்ந்தார். மலையக மக்களை இந்தியாவுக்கு விரட்டியடித்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க வளர்ந்தார். 1977 முதல் 1983 வரை கலவரங்களை உருவாக்கி ஜே.ஆர்.ஜயவர்தன வளர்ந்தார். 2009 யுத்தத்தை பயன்படுத்தி மஹிந்த ராஜபக்ஸ வளர்ந்தார். ஈஸ்டர் குண்டுவெடிப்பில் கோட்டாபய ராஜபக்ஸ வளர்ந்தார். தற்போது தொல்பொருள் மற்றும் விகாரை விடயங்களை முன்நிறுத்தி ரணில் விக்ரமசிங்க வளரப் பார்க்கிறார். இந்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஆட்சியாளர்களால் மக்கள் பிரிக்கப்படுகிறார்கள். அந்த பிளவைப் பயன்படுத்தியே ஆளும் அரசியல்வாதிகள் வளர்ந்திருக்கிறார்கள்.

ஆனால், மக்கள் ஒன்றுசேர்ந்து இப்பேர்பட்ட ஆட்சியாளர்களுக்கு புகட்டிய பாடத்தையும் இனி இலங்கை வரலாறு ஒருபோதும் மறக்காது. அசைக்கவே முடியாதென்றிருந்த, பெயரை உச்சரிக்கவே பயந்துகொண்டிருந்த, இலங்கையின் ஹிட்லர் என்று கூத்துக் காட்டிக்கொண்டிருந்த, நிறைவேற்று அதிகாரத்தை தன்கைக்குள் அடக்கியிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் கதையைத்தான் இப்போது நினைவுப்படுத்துகிறேன். இலங்கை வரலாற்றிலேயே மூன்றில் இரண்டு அதிகாரம் பெற்ற வலிமை மிக்க

ஜனாதிபதியொருவர் விரட்டியடிக்கப்பட்டாரெனில் அவர் கோட்டாபய ராஜபக்ஸதான்! மக்களை பிளவுப்படுத்தி வளர்ந்துகொண்டிருந்த ராஜபக்ஸர்களை மக்களால் விரட்டியடிக்க முடிந்தமைக்கான பிரதான காரணம் அவர்கள் எல்லோரும் பிரிவினையைக் கடந்து ஒன்றுபட்டமை ஆகும். அதனால்தான் ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்கும் மக்களை பிளவுப்படுத்துவதற்கான நிகழ்கால திட்டங்கள் எல்லாம் பெரிதும் வாய்க்காமல் போய்க்கொண்டிருக்கின்றன. வஞ்சிக்கப்பட்ட மக்கள் தற்போது ஒற்றுமைபட்டிருக்கிறார்கள். தவிர, அரசியல்வாதிகளை விடவும் தாங்கள்தான் வலிமையானவர்கள் என்பதை சாதாரண மக்கள் விளங்கிக்கொண்டும் இருக்கிறார்கள். அதனால், ஏமாற்று அரசியல்வாதிகள் தற்போது மக்களுக்கு பயந்திருக்கிறார்கள். அதனால், ஆளும் கூட்டம் ஒரு பக்கம் புதுப்புதுச் சட்டங்களை இயற்றியும், புதுப்புது ஆயுதங்களை வாங்கியும் மக்களை அச்சுறுத்த முயன்றுக்கொண்டிருப்பதுடன், மறுபக்கம் அவர்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்கான பல்வேறு திட்டங்களையும் வகுத்துக்கொண்டிருக்கிறது.

"தாங்கள் ஜனாதிபதி பதவியை எடுத்துக்கொள்ளும்படி கூறியபோது எதிர்த்தரப்பில் இருந்த எவரும் அதை எடுத்துக்கொள்ளவில்லை. ரணில் விக்ரமசிங்க மாத்திரமே நாட்டை மீட்டெடுக்க முன்வந்தார்." என்ற கருத்தை ஆளும் கோஷ்டி மக்கள் மத்தியில் விதைப்பதும் இதில் ஓர் அங்கமே. மக்களும் கூட அவ்வாறான கருத்துக்களுக்கு செவிசாய்க்கவும் ஆரம்பித்தார்கள். ஆனால், அத்தனை சர்வ சாதாரணமாக எதிர்த்தரப்பில் இருப்பவர்களுக்கு ஜனாதிபதி பதவியை எடுத்துக்கொள்ள முடியாது என்பதையும் பலர் அறிந்திருந்தார்கள். ஏனெனில், அமுலில் இருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தை பற்றியும் ஒரு தரப்பினர் தெரிந்து வைத்திருந்தார்கள். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பிரதமரை தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அதுப்போலவே, அதிகாரத்தில் இருக்கும் ஜனாதிபதியால் திடீரென்று அப்பதவியை தொடர முடியாத நிலை ஏற்பட்டால் அப்பதவி பிரதமரை சென்றடையும். அதன்பின்னர் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரும் வரையில் பாராளுமன்றின் பெரும்பான்மை வாக்குகளால் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படுவார்.

இனி நடந்த அரசியல் பம்மாத்துக்களைப் பார்ப்போம். மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவியை போட்டுவிட்டு ஓடியபொழுது அப்போதிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவால் ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். நன்கு திட்டமிடப்பட்டே அவர்களால் ரணில் விக்ரமசிங்க கொண்டுவரப்பட்டார். பின்னர் கோட்டாபய ராஜபக்ஸ விரட்டியடிக்கப்பட்டபோது தற்காலிகமாக ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்ரமசிங்க வந்துசேர்ந்தார். ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகியவுடனே கோட்டா கோ கம போராட்டக்காரர்களை அடித்துவிரட்டினார். அப்போது போராட்டக்காரர்கள் தோல்வி கண்டமைக்கான பிரதான காரணம் அவர்கள் மத்தியில் குழுவாதம் தலைத்தூக்கியிருந்தமை ஆகும். தவிர, அரசு போராட்டக்காரர்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. எந்நேரமும் போராட்டக்காரர்களைத் தாக்குவதற்கு அரச இயந்திரம் தயாராய் இருந்தது. சாதாரண சிப்பாய்கள் மேலிருந்து வரும் கட்டளைகளுக்கு பணிந்திருந்தார்கள். மக்களின் போராட்டம் ஜனநாயக ரீதியில் இடம்பெற்றிருந்தது. உருவாகிய சில வன்முறை


**ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகியவுடனே கோட்டா கோ கம போராட்டக்காரர்களை அடித்துவிரட்டினார். அப்போது போராட்டக்காரர்கள் தோல்வி கண்டமைக்கான பிரதான காரணம் அவர்கள் மத்தியில் குழுவாதம் தலைத்தூக்கியிருந்தமை ஆகும். தவிர, அரசு போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. எந்நேரமும் போராட்டக்காரர்களைத் தாக்குவதற்கு அரச இயந்திரம் தயாராய் இருந்தது. சாதாரண சிப்பாய்கள் மேலிருந்து வரும் கட்டளைகளுக்கு பணிந்திருந்தார்கள். மக்களின் போராட்டம் ஜனநாயக ரீதியில் இடம்பெற்றிருந்தது. உருவாகிய சில வன்முறை சம்பவங்களுக்கும் அரசாங்கமே காரணமாகவிருந்தது. ஆனால், அவர்கள் நரம்புத்தளர்ச்சியடைந்தே இருந்தார்கள். அத்தருணத்தில் போராட்டக்காரர்கள் உடனடியாகவே ஒரு பொது முடிவுக்கு வந்து ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றிருந்தால் முறையாகவே அரசையும் கைப்பற்றியிருக்க முடியும்.**



சம்பவங்களுக்கும் அரசாங்கமே காரணமாகவிருந்தது. ஆனால், அவர்கள் நரம்புத்தளர்ச்சியடைந்தே இருந்தார்கள். அத்தருணத்தில் போராட்டக்காரர்கள் உடனடியாகவே ஒரு பொது முடிவுக்கு வந்து ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றிருந்தால் முறையாகவே அரசையும் கைப்பற்றியிருக்க முடியும். ஆனால், குழுவாதமும் சந்தர்ப்பவாதமும் மக்களின் போராட்டத்தை ரணில் விக்ரமசிங்கவின் காலடிக்கு கொண்டுசென்று விட்டது. பின்னர், பாராளுமன்றத்தில் ராஜபக்ஸர்கள் உள்ளிட்ட மொட்டுக் கட்சி உறுப்பினர்களின் பூரண ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். அவர் ராஜபக்ஸர் கூட்டத்தைப் பாதுகாத்தார். “தாங்கள்தான் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக்கினோம்.” என்று நாமல் ராஜபக்ஸவும் பசில் ராஜபக்ஸவும் கூறியதை நினைவுக்கு கொண்டுவருவோம். சிந்திக்கவும் தவறாதிருப்போம்.

ஆனால், ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பாராளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்டபோது மக்களில் ஒரு பிரிவினர் நாடு நல்ல திசைக்குத் திரும்பும் என்று எதிர்ப்பார்க்கவும் செய்தனர். ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவாக ஒரு கூட்டம் புறப்பட்டு வந்தது. “ரணில் விக்ரமசிங்க கூறியது போலவே வரிசைகளை இல்லாமலாக்கினார். இனி நாட்டை அவர் நிமிர்த்தி விடுவார்.” என்று கம்பு சுற்றியது. ஆனால், உண்மையை விளங்கிக்கொள்ள அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. உண்மையில் ரணில் எவ்வாறு வரிசைகளை இல்லாமலாக்கினார்? எரிபொருள் பற்றாக்குறையால் மக்கள் வரிசையில் நின்றார்கள். அதனால்த்தான் போராட்டம் நீடித்தது. வரிசையில் நின்ற மக்கள் அதுவரையில் தங்களது வாகனங்களுக்கு Full Tank பெற்றோல், டீசல் அடித்தார்கள். ஆக, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தவுடன் QR முறையை கொண்டு வந்து எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தினார். மக்களின் கொந்தளிப்பை கட்டுப்படுத்த துப்பாக்கித் தாங்கிய படையினரை பெற்றோல் செட்டுகளில் நிறுத்தினார். ஆக, குறிப்பிட்டளவு எரிபொருளை வழங்கி ஓரளவுக்கு வரிசையை ரணில் இல்லாமலாக்கினார். பின்னர் கட்டங்கட்டமாக எரிபொருள் விலையை ரணில் விக்ரமசிங்க அதிகரித்தார். இப்பொழுது என்ன நடந்தது? வழமைப்போல எரிபொருள் கொள்வனவு செய்யும் அளவிற்கு ஏற்ற பணம் மக்களிடம் இல்லாது போனது. அதன்படி, மக்கள் தாமாகவே எரிபொருள் வாங்கும் அளவை குறைத்துக் கொண்டார்கள். பெற்றோல் செட்டுகளில் மக்கள் திரள்வது முற்றிலும் குறைந்து போனது. தவிர, மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியோ, அதிகளவில் எரிபொருளை இறக்குமதி செய்தோ ரணில் விக்ரமசிங்க வரிசைகளை இல்லாமலாக்கவில்லை. மிகக் கவனமாக திட்டமிட்டு அவர் மக்களை ஏமாற்றினார். அதனால் தற்போது மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வரிசைகளில் நின்றுகொண்டிருக்கின்றனர். மரண வாயில் வரிசைகளுக்கு விரட்டியடிக்கப்படுகின்றனர். எதிர்காலத்தை தொலைத்தவர்களின் வரிசைகளை

உண்மையில் ரணில் எவ்வாறு வரிசைகளை இல்லாமலாக்கினார்? எரிபொருள் பற்றாக்குறையால் மக்கள் வரிசையில் நின்றார்கள். அதனால்த்தான் போராட்டம் நீடித்தது. வரிசையில் நின்ற மக்கள் அதுவரையில் தங்களது வாகனங்களுக்கு Full Tank பெற்றோல், டீசல் அடித்தார்கள். ஆக, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தவுடன் QR முறையை கொண்டு வந்து எரிபொருள் விநியோகத்தை மட்டுப்படுத்தினார். மக்களின் கொந்தளிப்பை கட்டுப்படுத்த துப்பாக்கித் தாங்கிய படையினரை பெற்றோல் செட்டுகளில் நிறுத்தினார். ஆக, குறிப்பிட்டளவு எரிபொருளை வழங்கி ஓரளவுக்கு வரிசையை ரணில் இல்லாமலாக்கினார். பின்னர் கட்டங்கட்டமாக எரிபொருள் விலையை ரணில் விக்ரமசிங்க அதிகரித்தார். இப்பொழுது என்ன நடந்தது? வழமைப்போல எரிபொருள் கொள்வனவு செய்யும் அளவிற்கு ஏற்ற பணம் மக்களிடம் இல்லாது போனது. அதன்படி, மக்கள் தாமாகவே எரிபொருள் வாங்கும் அளவை குறைத்துக் கொண்டார்கள்.




நோக்கிச் செல்கின்றனர். கடன்காரர்களாக வரிசைகளில் நிற்கின்றனர். அதேநேரம், ஒரு கும்பல் மீளவும் ரணில் விக்ரமசிங்கவிடம் ஏமாந்து போவதற்கு வரிசையில் நிற்கிறது.

தொடர்ந்து ஆட்சியாளர்களை நம்பி நம்பி மக்கள் ஏமாந்துபோவதை எப்படித்தான் சகித்துக்கொள்வது? சளிப்புத் தட்டி மக்களாகவே திருந்துவதே சாலச் சிறந்தது. அந்த மாற்றம் தான் தற்போது நடந்துகொண்டிருக்கிறது. மக்கள் தெளிந்து மாறிக்கொண்டிருக்கிறார்கள். அதனால்த்தான், நீதிமன்ற தீர்ப்பையும் மீறி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல் ஆகிய பிற்போடப்பட்டன. ஆனால், ஜனாதிபதித் தேர்தலை பிற்போட்டதுபோல் ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது. அதனால், ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கு திட்டம் தீட்டி வருகிறார். அதனால் ஒரே பாறையைச் சேர்ந்த கட்சிகள் எல்லாம் இணைந்துகொண்டிருக்கின்றன. ரணில் விக்ரமசிங்க புதிய வேடம் தரிக்க ஒத்திகைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

இதில் நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய ஒரு விடயம் இருக்கிறது. ரணில் விக்ரமசிங்க என்பவர் அரசிலுக்கு புதியவர் அல்ல! அவர் தனது மாமா ஜே.ஆர். ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில், அதாவது 1977 இல் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். அவர் அன்று தொட்டு இன்று வரையும் பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, எதிர்கட்சித் தலைவராக, பிரதமராக, ஜனாதிபதியாக என்று எல்லா பதவிகளையும் அவர் வகித்துள்ளார். ஆனால், அவரது 45 வருடகால பாராளுமன்ற வாழ்வில் இந்த நாட்டை அவரால் கட்டியெழுப்ப முடியாமல் போயிருக்கிறது. மாறாக, நாடு வங்குரோத்து அடைந்தமையின் பிரதான பங்குதாரராக அவர் இருக்கிறார். இப்படிபட்டவரே தற்போது ராஜபக்ஸர் கூட்டத்துடன் இணைந்து நாட்டு மக்களை வதைத்து வருகிறார். 2024 ஆம் வருடத்திற்கான வரவு செலவில் வெற் வரி 18 சதவீதமாக்கப்பட்டிருக்கிறது. வரியை அதிகரித்த்தற்காக மஹிந்த ராஜபக்ஸ ரணில் விக்ரமசிங்கவுக்கு விருந்து வைத்தார் என்ற செய்தியும் கூட வெளிவந்திருந்த்து. ஆக, இந்த ஆட்சியாளர்கள் எப்போதுமே மக்கள்மீது அக்கறை இல்லாதவர்கள் என்பது மீண்டும் மீண்டும் ஊர்ஜிதமாகிறது. மக்களும் கூட இவற்றை புரிந்துகொண்டுள்ளார்கள்.

ஆட்சியாளர்கள் கடனுக்கு மேல் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால், வட்டிதான் மலைபோல் குவிந்துகொண்டிருக்கிறது. 2022 இல் முதல் 9 மாதங்களில் நாட்டின் வருமானத்தில் 60 சதவீதம் வட்டியை செலுத்துவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வருடத்தின் முதல் 9 மாதங்களில் கிடைத்த வருமானத்தில் 82 சதவீதம் கடன் வட்டி செலுத்துவதற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் மீண்டும் கடன் எடுப்பதை பற்றியே ஆட்சியாளர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். மறுபுறம், நாட்டின் பெறுமதிமிக்க வளங்களை விற்பனை செய்வதில் ஈடுபட்டு வருகின்றனர். ஆக, இவற்றை முடிவுக்கு கொண்டுவந்தாக வேண்டும். நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி கடனில்லா இலங்கையரை உருவாக்கிட வேண்டும். வரப்போகிற 2024 ஆம் ஆண்டு என்பது மக்களுக்காகட்டும், ஆட்சியாளர்களுக்காகட்டும், உலக நாடுகளுக்காகட்டும் வரலாற்றில் மறக்கமுடியாததாக அமையும். ஏனெனில், இலங்கை அரசியல் வரலாற்றின் புதிய அத்தியாயம் எழுதப்படப் போகிறது.



# 2024 புத்தாண்டும் மலையகமும்

**A.R.ரொஹறான்**
**விந்துலை**

2024 ஆம் ஆண்டு பிறப்பதற்கு இன்னும் சில வாரங்களே எஞ்சியுள்ள நிலையில் எதிர்வரும் வருடம் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பது எம் அனைவரினதும் எதிர்பார்ப்பாக காணப்படுகின்றது.

பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதன் பின்னர் இன்று நாட்டிலுள்ள பெரும்பாலானோரின் எண்ணம் எப்போது இந்த நெருக்கடிகளில் இருந்து மீள்வோம்; இவற்றிலிருந்து எப்போது விடிவு கிடைக்கும் என்கின்ற எதிர்பார்ப்பேயாகும். அதுபோலவே மலையக மக்களும் பெரும் மாற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் இலங்கையில் உள்ள அனைத்து துறையினரும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியதோடு தான் இதுவரை பின்பற்றி வந்த அனைத்து விடயங்களையும் மீளாய்வுக்கு உட்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு இதுவரை காலமும் கொண்டிருந்த அனைத்து நம்பிக்கைகளும் சுக்கு நூறாக நொறுங்கிப் போயின என்பதுதான் கசப்பான உண்மையாகும்

இவ்வாறான பின்னணியில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான கோட்டபாய ராஜபக்ச நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டதோடு அதற்கு பின்னர் நயவஞ்சகமான முறையில், மக்கள் ஆணை இல்லாத, மக்களால் நிராகரிக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானமை நாம் அறிந்ததே. அதன் பின்னர் நாட்டில் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துவிட்டதாகவும் இந்த தீர்வு கிடைப்பதற்கு ரணில் என்னும் மாயாஜால வித்தைக்காரர் காரணமாக இருந்ததாகவும் மாயக்கருத்தொன்றை தற்போதைய ஆட்சியாளர்கள் உருவாக்க முனைந்தாலும் இன்று அது புஷ்வானமாக மாறியுள்ளது.

எரிபொருள், சமையல் எரிவாயுவுக்கான வரிசைகள் நீக்கப்பட்டுவிட்டன. எல்லா பொருட்களும் தட்டுப்பாடு இன்றி மக்களுக்கு கிடைக்கின்றன. அஸ்வெசும கொடுப்பனவு திட்டம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு தற்போதைய வரவு செலவு திட்டத்தினூடாக 13 இலட்சம் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு முன்மொழியப்பட்டுள்ளது. இன்னும் இருபது லட்சம் பேருக்கு அஸ்வெசும கொடுப்பனவு முன்மொழியப்பட்டுள்ளது. ஏழு இலட்சம் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிப்பு முன்மொழியப்பட்டுள்ளன போன்ற வாதங்களை தற்போதைய ஆட்சியாளர்களும் அவர்களுடைய அடிவருடிகளும் முன்வைக்க முயல்கின்றனர்.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய பல விடயங்கள் காணப்படுகின்றன. அதாவது இலங்கை வங்குரோத்து அடைந்ததாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் செலுத்தப்பட




வேண்டிய கடன்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்தோடு நாணய நிதியக்கடனுதவி, அயல்நாடுகளில் இருந்தான சில கடனுதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அதாவது கடன்கள் செலுத்தப்படாததால் கடன் தவணைக் கொடுப்பனவுக்கான டொலர் வெளியேற்றம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதோடு கடனுதவிகள் மூலம் நாட்டுக்கு டொலர் பெற்றுக் கொள்ளப்பட்டன என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டும். இதனை பயன்படுத்தி தற்காலிகமாக எரிபொருட்கள், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அத்தோடு எரிபொருட்கள் மற்றும் கேஸ் சிலிண்டருக்குமான விலை பாரியளவில் அதிகரிக்கப்பட்டன. இதனூடாக எரிபொருள் பாவனையும் சமையல் எரிவாயு பாவனையும் பெருமளவு குறைந்துள்ளது. நடுத்தர வருமானத்தையும் கீழ்மட்ட வருமானத்தையும் கொண்டுள்ள மக்கள் எரிபொருள், எரிவாயு நுகர்விலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

மின்சார கட்டணம் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு மின் பாவனை பெருமளவு குறைந்துள்ளது. இதனால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல்வேறு தொழில் முயற்சிகள் முடக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் 1.6 மில்லியன் அலகுகளாக காணப்பட்ட மின் பாவனை தற்போது கிட்டத்தட்ட 1.5 மில்லியன் அலகுகளாக குறைந்து காணப்படுகின்றன. பொருளாதாரம் முன்னேற்ற பாதையில் செல்வதை அளக்கும் குறிகாட்டிகளாக மின் பாவனை அதிகரித்தல், எரிபொருள் பாவனை அதிகரித்தல் போன்றவை காணப்படுகின்றன. இலங்கையில் இவை கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது குறைவடைந்து கொண்டு செல்கின்றமை போன்றோ பொருளாதாரம் மீட்சி பாதையில் செல்லவில்லை என்பதை காட்டுகின்றது. அத்தோடு தற்போதைய வரவு செலவு திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு அஸ்வெசும பயனாளிகள் அதிகரிப்பு, ஓய்வூதிய அதிகரிப்பு என்பவற்றை நிறைவேற்றுவதற்கு

**மின்சார கட்டணம் பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு மின் பாவனை பெருமளவு குறைந்துள்ளது. இதனால் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. பல்வேறு தொழில் முயற்சிகள் முடக்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் 1.6 மில்லியன் அலகுகளாக காணப்பட்ட மின் பாவனை தற்போது கிட்டத்தட்ட 1.5 மில்லியன் அலகுகளாக குறைந்து காணப்படுகின்றன. பொருளாதாரம் முன்னேற்ற பாதையில் செல்வதை அளக்கும் குறிகாட்டிகளாக மின் பாவனை அதிகரித்தல், எரிபொருள் பாவனை அதிகரித்தல் போன்றவை காணப்படுகின்றன. இலங்கையில் இவை கட்டுப்படுத்தப்பட்டோ அல்லது குறைவடைந்து கொண்டு செல்கின்றமை போன்றோ பொருளாதாரம் மீட்சி பாதையில் செல்லவில்லை என்பதை காட்டுகின்றது.**



எவ்விதமான ஆக்கபூர்வமான திட்டங்கள் அரசினால் முன்வைக்கப்படவில்லை. பொருட்கள், சேவைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களோ புதிய சந்தைகளை கைப்பற்றுவதற்கான அல்லது புதிய சந்தைகளில் நுழைவதற்கான வாய்ப்புகள் எதனையும் அரசாங்கம் உருவாக்கவுமில்லை. உருவாக்க முயற்சிக்கவும் இல்லை. மாறாக இவ்வாறான சலுகைகள் வரவு செலவு திட்டத்தில் முன் வைப்பதனூடாக ரணில் தன்னுடைய வாக்கு வங்கியினை அதிகரித்துக் கொள்வதற்காக எதிர்வரும் தேர்தல்களில் வாக்குகளை இலக்காக கொண்டு இவ்வாறான வேலை திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதையே பறைசாற்றி நிற்கின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் மிகவும் பின்தங்கிய பொருளாதார சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்ற

மலையக மக்களைப் பொருத்தமட்டில் வரவு செலவுத் திட்ட முன்வைப்புகள் வெறும் புஸ்வானமாகவே காணப்படுகின்றன. பாடசாலைகளில் மாணவர்களின் வரவு வீதம் குறைவடைந்துள்ளன. இடைவிலகல்கள் பெருமளவில் அதிகரித்து காணப்படுகின்றன. தொழில் நிமித்தம் வெளியிடங்களுக்கு செல்பவர்களின் தொகை அதிகரித்து காணப்படுகின்றது. நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடாத்தல், பிள்ளை வளர்ப்பு, குடும்பத்தை கொண்டு நடாத்தல் என்பன பெரும் சவால்களாக மாறியுள்ளன. இப்படியான சூழ்நிலைகள் காணப்பட்ட போதிலும் மலையக அரசியல்வாதிகள் நாட்டை படுகுழியில் தள்ளிய பொருளாதார நெருக்கடிகளுக்கு பொறுப்புகூற வேண்டிய பாரம்பரிய அரசியல் கட்சிகளோடு இணைந்து கொண்டு தமக்கு வாக்களித்த மக்களின் நலனை துச்சமாக எண்ணி வழமைபோலவே தங்களது சொந்த சுயநல அரசியல் பயணத்தை தொடர்கின்றமையை காணமுடிகின்றது. தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ரணில் ராஜபக்ச அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவியினை பெற்று ஆதரவாக செயல்படும் அதேவேளை திகாம்பரம் அணியினர் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே காணப்படுகின்றனர். ஏனைய மலையக அரசியல்வாதிகளும் மதில் மேல் பூனையை போல நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே மலையக மக்கள் இனிவரும் காலங்களில் பாரம்பரிய தேசிய கட்சிகளையோ அல்லது அதன் தரகர்களாக செயல்படும் மலையக அரசியல்வாதிகளையோ நம்பிக் கொண்டிராமல் உண்மையான விடுதலையை நோக்கிய சமூக மாற்றத்திற்கான பயணத்தில் அடியெடுத்து வைக்க வேண்டிய காலம் கனிந்துள்ளது என்பதே உண்மையாகும். எனவே மலையக மக்களும் இணைந்து மக்கள்நேய ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கான சமூக கட்டமைப்பு மாற்றத்தில் பங்குதாரர்களாக செயற்படும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதுதான் எதார்த்தமாகும். எதிர்வரும் புத்தாண்டை நமக்கானதாக மாற்றிக்கொள்வோம்! அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ரணில் ராஜபக்ச அரசாங்கத்தில் இணைந்து அமைச்சுப் பதவியினை பெற்று ஆதரவாக செயல்படும் அதேவேளை திகாம்பரம் அணியினர் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகவே காணப்படுகின்றனர். ஏனைய மலையக அரசியல்வாதிகளும் மதில் மேல் பூனையை போல நிலைமைகளை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். எனவே மலையக மக்கள் மலையக அரசியல்வாதிகளையோ நம்பிக் கொண்டிராமல் உண்மையான விடுதலையை நோக்கிய சமூக மாற்றத்திற்கான பயணத்தில் அடியெடுத்து வைத்து எதிர்வரும் புத்தாண்டை நமக்கானதாக மாற்றிக்கொள்வோம்! அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**



# ஒளிச்சிறகுகளுடன் சில சொற்கள்

ஆதியிலிருந்த வனைஞன்
எதிர் காலத்திற்கென
ஒளிச்சிறகுகளுடன் சில சொற்களையும்
படைத்து பறக்கவிட்டான்.

இருளின் அடர்ந்த கருமைக்குள்ளேயே
துளாவிக் கொண்டிருந்த
நான்
சிறகுகளுடன் ஒளிரும்
சொற்களை
கண்டு
அஞ்சினேன்


வனைஞன் கை நிறையநிறைய
அள்ளி தந்த
சொற்களில் படபடப்புடன்
ஒளிரும் சிறகை
பெரும்
அச்சத்தோடு தொடப்பயந்து
மீளா இருளுக்குள் ஓடிக் கொண்டிருந்தேன்

ஒளிச்சிறகுகளுடன் பறந்து கொண்டிருந்த சொற்கள்
முகமற்றவருக்கு அழகிய செழித்த முகத்தையும்
அற்புதங்களை நிகழ்த்தும் குரலையும்
விடுதலையின் பரந்த வானத்தையும்
உலகமெங்கும்
தர
நானும் சூடிக் கொண்டேன்
ஒளிச்சிறகுகளுடன்
சில சொற்களை...

சண்முகம் சிவகுமார்



# தேயிலைக் காற்றின் மகிமை






கிட்ணன் செல்வராஜ்

தேயிலை யுகம் 1867 இல் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. ஜேம்ஸ் டெய்லர் என்ற வெள்ளை துரையுடன்! அது படிப்படியாக விரிவடைந்து, அபிவிருத்தியடைந்து இலங்கையின் பிரதான ஏற்றுமதி பயிராகவும், டொலரைப் பாரிய சம்பாதிக்கும் ஒரு துறையாகவும் மாறி இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்கை ஆற்றியது மட்டுமல்ல, இலங்கையின் கல்வித்துறையில் பேசும் பொருளாகவும் மாறியிருந்தது. அதாவது, இலங்கையின் ஏற்றுமதி பயிர் தேயிலை என்று தன்னை முன்னிறுத்திக் கொண்டது.

மத்திய மலைநாட்டின் லூல்கந்தூர தோட்டத்தில் ஆரம்பித்த தேயிலை உற்பத்தி ஊவா, தெற்கு, சப்பிரகமுவ, மேல் மாகாணங்களை நோக்கி விரிவடைந்தது. அதோடு, தோட்டங்கள் தோறும் தேயிலை தொழிற்சாலைகள் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் ஒன்றுகலந்து இலங்கையை உலகின் தலைசிறந்த தேயிலை "Ceylon Tea" என்ற நாமத்தையும் தனதாக்கிக் கொண்டது.

அவ்வாறு வளரச்சி நடைபோட்ட தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பத்தில் "விதை தேயிலை" உற்பத்தி கிட்டத்தட்ட 100 வருட காலமாக முன்வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சுமார் 50 வருட காலத்திற்கு முன்னர் தண்டு மூலம் உற்பத்தி செய்யும் முறை அதாவது, "பதிய முறை" செய்கை மேற்கொள்ளப்பட்டு தேயிலைத்துறை மேலும் வளர்ச்சியை நோக்கி முன்னேறியது. அது இலங்கைப் பொருளாதாரம் தேயிலையை நம்பியிருந்த காலம் எனலாம்.

அவ்வாறு பல பாய்ச்சல்களாக முன்னோக்கி நகர்ந்த தேயிலை தொழிற்துறை 1980 ஆம் ஆண்டின் பின்னர் பாரிய சரிவையும் தோல்வியையும் சந்தித்தது. 1992 ஆம் ஆண்டு தேயிலைத் தோட்டங்கள் தனியாருக்கு குத்தகைக்கு விடும் அளவுக்கு சரிவை சந்தித்தது.

தனியாருக்கு அதாவது பல்தேசிய கம்பனிகள் 22-க்கு இலங்கையின் 449 பெருந்தோட்டங்கள் 55 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. 2047 ஆம் ஆண்டே குத்தகை காலம் முடிவடைகிறது. 2023 ஆம் ஆண்டுடன் 31 வருடங்களில் நாட்டில் 198 தேயிலை தொழிற்சாலையும், கண்டி மாவட்டத்தில் 24 தொழிற்சாலைகளும் மூடப்பட்டுள்ளன.

65% தொழிலாளர்கள் தொழிற்துறையில் இருந்து வெளியேறிவிட்டனர். 1992-க்கு பின்னர் பச்சைக் கொழுந்தின் உற்பத்தி 55% ஆல் குறைந்துள்ளது. அத்துடன், முதலாவது இடத்தில் இருந்த தேயிலை 4 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டு 5 ஆவது இடத்தை நோக்கி நகர்கிறது. 7 ஆவது இடத்தை தொடுமாக இருந்தால் இலங்கை தேயிலை பட்டியலில் இருந்து ஒதுக்கப்படும் அபாயம் தென்படுகிறது. ஒரு காலத்தில் டொலரை அறுவடை செய்த தொழிற்றுறை இன்று ரூபாய்க்காகவும் கையேந்துகிறது.



தேயிலை தொழிற்றுறை இந்தளவு வீழ்வதற்கு பிரதான காரணம் அரசாங்கத்திடம் வேலைத்திட்டமோ, தேவையோ இல்லாமை. தொழில்நுட்பத்தை புகுத்தாமை, தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளமும், நலன்புரிகளையும் வழங்காமை, புதிய தேயிலை உற்பத்திகளை அறிமுகப்படுத்தாமை, புதிய சந்தைகளை தேடாமை போன்றவை தேயிலை தொழிற்றுறை பின்னடைவுக்கு பிரதான காணரம்.

## அரசாங்கத்திடம் வேலைத்திட்டம் இல்லை




1972 ஆம் ஆண்டின் பின் தோட்டங்கள் அனைத்தும் அரசாங்கத்திடம் இருந்த போதும் வெள்ளையர்கள் விட்டு சென்றதை மாத்திரமே மேற்கொண்டனர். அத்துடன் அரச நிறுவனம் என்ற போர்வையில் அரசு கொள்ளையடிப்பதை முன்னெடுத்து தோட்டத் தொழிற்றுறையை அரசியலுடன் இணைத்து தொழிற்சங்க தலைமைகளுடன் தோட்டங்களை தமது அரசியல் தேவைக்கு பயன்படுத்தவும், அதனூடாக பொய் வாக்குறுதிகள் ஊடாகவும் அரசியல் பாதுகாப்புக்கான கவசமாக பயன்படுத்தியதேயன்றி பெருந்தோட்டங்களை அபிவிருத்தி பாதையில் கொண்டுசெல்லவில்லை. அதன் எதிரொலியாகவே படிப்படியாக பெருந்தோட்டங்கள் அழிவையும், வீழ்ச்சியையும் நோக்கி நகரத் தொடங்கியது.

## தேயிலை தொழிற்றுறையில் தொழில்நுட்பம்

1867 இல் அறிமுகப்படுத்தப்பட்ட விதை தேயிலை சுமார் 100 வருடங்கள், அதன் பின்னர் 50 வருடங்கள் பதியமுறையோடு கலந்த தேயிலை பயிர்ச்செய்கை அதோடு தேயிலையையும், மண்வளத்தையும் ஆய்வு செய்வதற்கும் ஆராய்ச்சி நிலையங்கள், தேயிலை ஆராய்ச்சி நிலையங்கள் 1920 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு இப்போது அவை மூடு நிலையில் உள்ளன.

அத்துடன், தேயிலை தொழிற்றுறையில் புதிய பதியமுறை ரக கன்றுகள் ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கக் கூடிய அறுவடை மற்றும் உற்பத்தியை கூட்டுவதற்கு ஏதுவான குறைந்தபட்ச நடவடிக்கைகள் கூட முன்னெடுக்கப்படவில்லை.



இன்று உலகில் நவீன முறையில் தேயிலை செய்கை முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் அதாவது சீனா, இந்தியா, வியட்நாம் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் முறைகளில் ஓரளவாவது மேற்கொள்ளப்படாமையே தேயிலை பெருந்தோட்டங்கள் தூக்குக் கயிற்றில் தொங்குகிறது. எனவே, தேயிலை தோட்டங்களை கட்டியெழுப்புவதற்கு புதிய, நவீன தொழில்நுட்ப அறிவியல் வேலைத்திட்டம் அதாவது குறுகியகால, இடைக்கால, நீண்டகால வேலைத்திட்டம் அவசியம்.



## சம்பளம்

தேயிலை பெருந்தோட்டங்கள் அரச பராமறிப்பில் இருந்து விடுபட்டு தேயிலை உற்பத்தி வீழ்ச்சியை நோக்கி செல்வதால் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிப்பை நோக்கி செல்வதில்லை. தற்போது சம்பள நடைமுறை சரியாக இல்லாததாலும், தேயிலை தொழிற்றுறை வீழ்ச்சியினாலும் சம்பள உயர்வு என்பது மூடிமறைக்கப்படும் ஒரு விடயமாக மாறிவிட்டது. அதனால் சம்பள அதிகரிப்பு என்பது வாழ்க்கை செலவுக்கு ஏற்ப பொறுத்தமான, போதிய சம்பள அதிகரிப்பு அவசியம்.



## தேயிலை Tea

சம்பள அதிகரிப்பு இல்லையெனில் பெருந்தோட்ட பராமறிப்பும், பயிர்செய்கையும் அழிவுப்பாதையில் செல்லும் என்பது 100 சதவீத உண்மை.



## புதிய உற்பத்தி (New Produced)

வெள்ளையர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலை ரகங்களையே இன்னும் நாம் உற்பத்தி செய்து ஏற்றுமதி விற்பனை செய்து வருகிறோம். உதாரணமாக, BOP, BOP பெனிஸ், டஸ்ட் No 1, No 2 என்பவற்றையே அதற்கு மேலதிகமான தேயிலை உற்பத்திகளை நாம் மேற்கொள்ளவில்லை. கால மாறுதலுக்கு ஏற்ப Tea Toffy போன்றவற்றை அறிமுகப்படுத்தலாம். ஆனால், எல்லாமே பூச்சியம். எனவே, புதிய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு புதிய வேலைத்திட்டம் உட்புகுத்த வேண்டும்.




## சந்தை (Market)

கடந்த காலம் முதல் (Ceylon Tea) என்ற லேபல் உலகளாவிய ரீதியில் எமக்கு மதிப்பை வழங்கியிருந்த போதும் தற்போது (Ceylon Tea) உற்பத்தி தரம் குறைவாகவே காணப்படுகிறது. அத்துடன், இன்னமும் பழைய கொள்வனவாளர்களையே நம்பியிருக்க வேண்டிய நிலையில் உள்ளோம். நமது தேயிலையை கொள்வனவு செய்யும் பல நாடுகள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்திருப்பதால் அந்நாடுகள் கொள்வனவு செய்யும் தேயிலையின் அளவு பாரிய வீழ்ச்சிக் கண்டுள்ளது. உக்ரேன், ஈராக், ரஸ்யா, ஈரான் போன்ற நாடுகளாகும்.

எனவே, தற்போது தேயிலை விற்பனை ஒன்லைன் மூலம் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளும் போது அதனை சரியாக பயன்படுத்தி உலக சந்தையின் டிஜிட்டல் இடத்தை கைப்பற்ற வேண்டும். 2023 ஆம் ஆண்டு 290 மில்லியன் கிலோகிராம் ஏற்றுமதி செய்யலாம் என அரசாங்கம் கனவு கண்டபோதும் நடைமுறையில் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, புதிய சந்தைக்கான அடித்தளத்தை போடவேண்டுமாயின் புதிய உற்பத்தி அணுகுமுறைகளை கையாள வேண்டும். இல்லாவிட்டால் வரலாற்றில் நூதனசாலையில் கண்காட்சிப் பொருளாக தேயிலை மாறும் என்பது உண்மை. அதற்கு நடைமுறை வேலைத்திட்டம் உள்ள அரச கட்டமைப்பு அவசியம்.



# கண்ணீருடன் வாழ்க்கை நடத்தும் கதாநாயகிகள்

**கண்ணன் மதுஷா**

"மங்கையராய்ப் பிறந்திட பல மாதவம் புரிந்திட வேண்டுமப்பா" என்ற கவிமணியின் வரிகள் அழகானவை; சிந்தனையை தூண்டுபவைதான். ஆனால், இன்றைய நூற்றாண்டில் ஏன் பிறந்தோம்; அதுவும் பெண்ணாக ஏன் பிறந்தோம்; இத்தனை இன்னல்களை சந்திக்கவா என எம்மில் எத்தனை பெண்கள் ரணமாய் திணறுகின்றனர். மலையகப் பெண்கள் என்ற பார்வையில் ஓர் கண்ணோட்டம்.

**"கருதனில் மங்கையராய்ப் பிறந்து வயிற்றில் குழந்தைகளை சுமந்து மார்பினில் கணவனை தாலாட்டி முதுகினில் குடும்ப சுமைகளை தாங்கும் கற்பக விருட்சகம் அவள் தான் பெண்"**

இன்று பூட்டனும் தோட்டத்தில் பிறந்து, பாட்டனும் தோட்டத்தில் பிறந்து வளர்ந்து, தந்தையும் அதே தோட்டத்து வாழ்க்கையும் வாழ்ந்து, நான்காவது தலைமுறையும் அதே விடிவில்லா வாழ்க்கையை தான் வாழ்கின்றனர். தோட்டப்புறங்களில் பெண்கள் படும் இன்னல்கள் சொல்லிலடங்காதவை. தோட்டத்தில் வாழும் பெண்களின் இன்னல்களை பேரூந்து ஏறி ஊர் விட்டு ஊர் சென்று பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. வீட்டினுள் சற்றுத் திரும்பிப் பார்த்தால் அம்மா, பாட்டி, சித்தி, மாமி, சகோதரி என ஒவ்வொரு பாத்திரங்களும் பறைசாற்றி நிற்கும் பெண்களின் வாழ்க்கைத் துயரங்களை!

**"கருவறையில் மலர்ந்து கருவையும் சுமந்து கஷ்டங்களையும் தாங்கி கடைசி வரை போராடுபவர் பெண் எனும் கதாப்பாத்திரம்"**

ஆம்! கஷ்டங்களை தாங்கி கல்லாய்ப் போன கதாநாயகிகள் ஒவ்வொரு வீட்டிலும் வாழும் பெண்கள். தொலைக்காட்சியில், சினிமாவில் வரும் ஒவ்வொரு கதாநாயகிகளும் பணத்திற்காக பாத்திரமேற்பவர்கள். ஆனால், மலையக பெண்கள் பிறப்பிலேயே கதாநாயகிகள். வாழ்நாள் முழுவதும் தன் கணவனுக்காக, பிள்ளைகளுக்காக, சொந்தங்களுக்காக உலகம் என்னும் நாடக மேடையில் நடிக்கும் கதாபாத்திரம் பெண்கள். கஷ்டத்திலும் புன்னகிக்க எம் மலையக பெண்கள் கைதேர்ந்தவர்கள் என்றுதான் கூற வேண்டும்.

அந்தவகையில், டவுன்சயிட் தோட்டத்தில் சுலோஜனா எனும் பெண் 1960-களில் இரத்தினபுரியில் பிறந்தவள். 13 வயதில் தேயிலை சாரத்தை தலையில் சுமந்தபடி தேயிலை செடிகளுடன் போராட ஆரம்பித்தாள். 2 வருடங்கள் கழிய 15 வயதில் திருமணம் செய்து வைத்துள்ளனர். காலி பிரதேசத்தில் கொண்டகலை எனும் ஊரிற்கு திருமணம் முடித்து சென்றுள்ளார். 18 வயதாகும்போது ஒரு ஆண் குழந்தையின் தாயாகின்றார். காலம் செல்ல 2 ஆண் குழந்தைகளினதும் ஒரு பெண்

குழந்தையினதும் தாயாகியுள்ளார் சுலோஜனா. மிகவும் சிரமப்பட்டு பிள்ளைகளை வளர்த்து வருகின்றனர். இளமை பருவத்திலேயே மாரடைப்பு ஏற்பட்டு கணவனை இழந்த பெண் தன்னுடைய பிள்ளைகளையும் குடும்ப சுமைகளையும் சுமந்து செல்ல வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றார். பிள்ளைகளை பராமரித்து உணவளித்து அரவணைப்பையும், அன்பையும், பாதுகாப்பையும் மட்டுமே அப்பெண்ணால் அந்தப் பிள்ளைகளுக்கு வழங்க முடிந்துள்ளது. அவ்வளவு சுமைகளையும் சுமந்து கல்வி என்பதனை அப்பெண்ணால் அந்தப் பிள்ளைகளுக்கு வழங்க முடியாமல் போயுள்ளது. ஏனெனில், அந்த கொண்டகலை தோட்டத்தில் பள்ளிக்கூடமொன்று இருந்ததில்லையாம். பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமெனில், தூர பிரதேசத்திற்பே அனுப்ப வேண்டுமாம். கணவனை இழந்த அந்தப் பெண்ணால் அந்த தேவையை நிவர்த்தி செய்ய முடியாமல் சற்று படித்தவர்களிடம் லயத்திற்கு தன் பிள்ளைகளை ஏதேனும் படிப்பதற்காக அழைத்துச் சென்றிருக்கிறார். பின் அந்த கொண்டகலை தோட்டத்தில் இருந்து டவுன்சயிட் தோட்டத்திற்கு 1992 இல் வந்துள்ளனர். சிறுவயதிலேயே வேலைக்குச் சென்று சிறிய வயதிலேயே திருமணமாகி பிள்ளைகளைப் பெற்று வாழவேண்டிய வயதில் கணவனையும் இழந்து 47 வருடங்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்காக உழைத்து பேரப்பிள்ளைகளுடன் தனது இறுதி காலத்தை கழிக்க விரும்பிய அந்தப் பெண்மணி தனது 63 வயதில் இதய நோய் காரணமாக காலம் சென்றுள்ளார். எனவே, இதுபோன்ற எத்தனை எத்தனை வீரப்பெண்கள்



**எம்மில் பல பெண்கள் தன்னுடைய பிள்ளைகளில் ஒரு பிள்ளையாவது படித்து அரசாங்க உத்தியோகத்திற்கு செல்ல வேண்டும் என்ற அவாவில் இன்னும் மாடாய் தேய்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். ஒரு நாள் சம்பளத்திற்காக காலை 7.30 மணிக்கு சென்று மலை 5.00 மணி வரை 22 கிலோகிராம் கொழுந்து பறித்து ஒரு நாளை ஒப்பேற்றி வருவாள். மண்வெட்டியாக தன் கைகளை பயன்படுத்தி எத்தனை தேயிலைத் தோட்டத்தை அவள் சுத்தம் செய்திருப்பாள். என் பிரதேச பெண்கள் அனைவருமே காலை 4 மணிக்கு எழுந்து சமைத்து, வீட்டுவேலை செய்து பிள்ளைகளை புள்ளைமடுவத்தில் விட்டு வெகுதூரத்தில் ஒரு மலைக்கு சென்று அங்கே யுத்தத்தில் ஈடுபடுவதைப் போல தேயிலையுடன் போராடி 22 கிலோகிராம் கொழுந்து பறித்து, மீண்டும் மதியம் ஓடி வருவாள் அவளின் பிள்ளை முகம்காண!**

எம்மண்ணில் வாழ்ந்திருப்பார்கள். ஆனால், இங்கு இவர்களை போற்றுவதற்கு ஒரு இரங்கல் மொழி கிடையாது. இவ்வாறு இறந்த ஒவ்வொருவரும் இருந்திருந்தால் அவள் தலையில் தேயிலை சாரம் சுமந்து சுமந்து தலையில் காண் போன்ற அடையாளமும் அவளுடைய நெற்றிப் பரப்பும் அடையாளப்படுத்தும் நினைவுகூரும் அவளும் இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெழும்பு என்பதனை.

எம்மில் பல பெண்கள் தன்னுடைய பிள்ளைகளில் ஒரு பிள்ளையாவது படித்து அரசாங்க உத்தியோகத்திற்கு செல்ல வேண்டும் என்ற அவாவில் இன்னும் மாடாய் தேய்ந்து கொண்டு தான் இருக்கின்றார்கள். ஒரு நாள் சம்பளத்திற்காக காலை 7.30 மணிக்கு சென்று மலை 5.00 மணி வரை 22 கிலோகிராம் கொழுந்து பறித்து ஒரு நாளை ஒப்பேற்றி வருவாள். மண்வெட்டியாக தன் கைகளை பயன்படுத்தி எத்தனை தேயிலைத் தோட்டத்தை அவள் சுத்தம் செய்திருப்பாள். என் பிரதேச பெண்கள் அனைவருமே காலை 4 மணிக்கு எழுந்து சமைத்து, வீட்டுவேலை செய்து பிள்ளைகளை புள்ளைமடுவத்தில்



விட்டு வெகுதூரத்தில் ஒரு மலைக்கு சென்று அங்கே யுத்தத்தில் ஈடுபடுவதைப் போல தேயிலையுடன் போராடி 22 கிலோகிராம் கொழுந்து பறித்து, மீண்டும் மதியம் ஓடி வருவாள் அவளின் பிள்ளை முகம்காண! இவ்வாறு தான் இங்கு பல பெண்களின் வாழ்க்கை ஓட்டம் ஓடிக்கொண்டிருக்கிறது. நானும் ஒரு காலத்தில் அந்தப் “புள்ளமடுவம்” என்ற பெயரில் நடைபெற்ற பிள்ளை பராமரிப்பு நிலையத்தில் வளர்ந்த ஒரு பெண் என்பதனை சற்றும் மறக்கவில்லை. இன்றும் நான் வாழும் பிரதேசத்தில் இந்த புள்ளமடுவங்கள் இயங்கிதான் வருகின்றன. 12 மணிக்கு கொழுந்து நெறுத்து ஓடோடி வந்து பிள்ளையை குளுப்பாட்டி சோறூட்டி மீண்டும் கொண்டு விட்டுவிட்டு மலைக்கு ஓடோடிச் செல்வாள். மலையக பெண்களின் வாழ்க்கை ஓடோடியே நாட்கள் கழிந்துவிட்டன என்று தான் கூறவேண்டும். தேயிலை மலைக்கு சென்றால் அவள் படும்பாடு சொல்லிலடங்கா 22 கிலோகிராம் கொழுந்து இல்லையேல் அரை பேர் என மாத்தியாவின் சத்தம் மறுபுறம் கங்காணி கத்துவார் ஒழுங்கா அரும்பு ஒதுக்கி கொழுந்து எடுங்க இவ்வாறான முறையில் தான் ஒவ்வொரு பெண்ணினதும் வாழ்நாட்கள் கழிகின்றது.

**பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து முகம்கொடுத்து சளித்துப் போய் கடைசியாக ஒரு முடிவுக்கு தள்ளப்படுகின்றார்கள். அதுதான் வெளிநாடு செல்லல், உள்நாட்டில் படாதபாடுபட்டு வெளிநாடு செல்கிறாள். மலையகப் பெண்கள் வெளிநாடு செல்ல எத்தனிப்பதன் காரணங்கள் குடியே வாழ்க்கை என நினைத்து வாழும் ஒரு சில கணவர்களின் அடாவடித்தனம், உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை, பிள்ளைகளின் எதிர்காலம், கடன்சுமை, கணவனின் பொறுப்பின்மை என பல பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வை காண வெளிநாடு செல்கிறாள். வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெண்கள் பணிப்பெண்ணாக வெளிநாடுகளுக்கு செல்வது மிகக் குறைவு. ஆனால், எம் மலையகத்தின் சாபம் இங்கு பெண் படும் துயரத்திற்கு அளவே கிடையாது. குடும்ப கஷ்டங்களை சுமந்து பறவையயாய் வெளநாடு பறக்கின்றாள்.**

இதை தவிர ஆண்களின் குடிபோதை பெண்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றது.

**“ஆண் மதுவில் இன்பம் கழிக்கின்றான். ஆனால், அந்த மதுவினால் அந்த மாது படும் வேதனை எத்தனை எத்தனையோ?”**

மலையகத்தில் பெரும்பாலானோர் மாலையானதும் மதுவில் மாதுவை தேடிச் செல்பவராகவே இருக்கின்றனர். ஆனால், அவனோ மதுவில் இன்பத்தை தேட மாது அவனை எண்ணியபடி கடிகாரத்தை பார்த்து காத்திருப்பாள். அவள் ஆனால் எத்தனை ஆண்கள் பெண்களை அன்புடன் அணுகுகின்றனர் என்பதனை சற்று சிந்தித்தால் விரல் விட்டு எண்ணக்கூடிய ஆண்களை மலையகத்தில் தன் குடும்பத்திலாவது அவளுக்கு பெண் என்ற அந்தஸ்தை வழங்குகின்றனர். ஏனையோர் அவனுடைய மதுவிற்கு மருந்தாக தான் தன் மனைவியை பார்க்கிறான். இதனால் அவள் உடலியல் ரிதியாக அனுபவிக்கும் துயரம் அவளின் கண்களின் கண்ணீர் கவிதையாக சிந்தும். மலையகத்தில் ஆண்கள் ஆறு மணிக்கு பிறகு நான்கு கால் குதிரையில் வருவதுபோல் குதித்து குதித்துதான் வீடு வந்து சேர்வார்கள். குடித்தால் அவனும் ஒரு போர்வீரன் ஆகிவிடுவான்போல. அவனின் வீரத்தை இங்கு தன் மனைவி மீது தான் காட்டுகின்றான். ஆனால், அவனும் சற்று சிந்தித்தால் தன் மனைவியையும் ஒரு பெண் என நினைத்து குரல் எழுப்பினால் மலையகப் பெண்களின் விடிவு காலமும் வெகுதூரத்தில் இல்லை என்றே கூற

**ஏனைய சமூகத்தைப் போன்று மலையகப் பெண்களும் சகல உரிமைகளுடனும் வாழும் ஒரு காலம் வரவேண்டும். இங்கே பல பெண்கள் தேயிலை சாரத்தை தலையில் சுமப்பதோடு குடும்ப பாரத்தை முதுகில் சுமந்து கண்ணீரோடு வாழ்க்கை பயணம் மேற்கொள்ளும் இந்நிலை மாறவேண்டும். ஒரு அழகான விரும்பிய ஒரு உடையை கூட எம்மில் எத்தனை பெண்கள் வாங்கி அணிந்திருப்பர். அழகு பார்ப்பதுடன் செல்கிறது இவர்களின் வாழக்கை, உடையைப் போலவே!**




விரும்புகின்றேன்.

இவ்வாறான பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து முகம்கொடுத்து சளித்துப் போய் கடைசியாக ஒரு முடிவுக்கு தள்ளப்படுகின்றார்கள். அதுதான் வெளிநாடு செல்லல், உள்நாட்டில் படாதபாடுபட்டு வெளிநாடு செல்கிறாள். மலையகப் பெண்கள் வெளிநாடு செல்ல எத்தனிப்பதன் காரணங்கள் குடியே வாழ்க்கை என நினைத்து வாழும் ஒரு சில கணவர்களின் அடாவடித்தனம், உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மை, பிள்ளைகளின் எதிர்காலம், கடன்சுமை, கணவனின் பொறுப்பின்மை என பல பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வை காண வெளிநாடு செல்கிறாள். வடக்கு, கிழக்கு பகுதிகளில் பெண்கள் பணிப்பெண்ணாக வெளிநாடுகளுக்கு செல்வது மிகக் குறைவு. ஆனால், எம் மலையகத்தின் சாபம் இங்கு பெண் படும் துயரத்திற்கு அளவே கிடையாது. குடும்ப கஷ்டங்களை சுமந்து பறவையயாய் வெளநாடு பறக்கின்றாள். பிள்ளைகளை குடிகார கணவனிடமோ அல்லது வேறு உறவினர்களிடமோ ஒப்படைத்து செல்வாள். இவ்வாறு ஒப்படைத்து செல்லும் எத்தனை பிள்ளைகளின் வாழ்க்கை சின்னாபின்னமாக மாறியுள்ளது. துஸ்பிரயோகம், பாலியல் கொடுமை, போதைப்பொருள் அடிமை



என வாழ்க்கை சீரழிந்து சென்றுவிடுகின்றன. இதை எம் கண்களால் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. கணவனினதும் பிள்ளைகளினதும் பிரிவு, தூரதேசத்து வாழ்க்கையின் துன்பமும் எம்மில் பலருக்க ஏராளம், வெளிநாடு எனும் போர்வையில் அவள் அங்கு சென்று உளரீதியாக, உடல்ரீதியாக பெண்கள் அனுபவிக்கும் துன்பங்கள் எப்போதும் எண்ணிலடங்காதவை.

ஏனைய சமூகத்தைப் போன்று மலையகப் பெண்களும் சகல உரிமைகளுடனும் வாழும் ஒரு காலம் வரவேண்டும். இங்கே பல பெண்கள் தேயிலை சாரத்தை தலையில் சுமப்பதோடு குடும்ப பாரத்தை முதுகில் சுமந்து கண்ணீரோடு வாழ்க்கை பயணம் மேற்கொள்ளும் இந்நிலை மாறவேண்டும். ஒரு அழகான விரும்பிய ஒரு உடையை கூட எம்மில் எத்தனை பெண்கள் வாங்கி அணிந்திருப்பர். அழகு பார்ப்பதுடன் செல்கிறது இவர்களின் வாழக்கை, உடையைப் போலவே!

இரத்தம் உறிஞ்சும் அட்டைகள் நித்தமும் கொப்பளிக்கும் விரல்கள், வேலை செய்து மாடாய் உழைத்துப் போன கைகள் என மலையகப் பெண்களின் வாழ்வு காலம் இரத்தக் கண்ணீர் சிந்துகின்றது. தேயிலை பறித்து தலையில் சுமையுடன் மலைகளில் உச்சி வரை ஏறி இறங்கும் இப்பெண்களை போற்ற ஒரு வாய்மொழி இல்லை. இவர்கள் சரித்திரம் படைக்கும் புதுமைப் பெண்கள்தான். இவர்களின் வாழ்வு காலத்திலேயே உழைப்பு மட்டுமே ஓயாது இவர்களுடன் தொடர்கிறது. இன்று சர்வதேச மகளீர் தினத்தை முன்னிட்டு வெகுவிமர்சையாக கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. ஒரு நாள் மட்டும் ஞாபகப்படுத்தும், கொண்டாடப்படும் பாத்திரம் அல்ல பெண். வாழ்நாள் முழுவதுமே போற்றப்படக்கூடியவள், மதிக்கப்படக் கூடியவள் என்பதை யாரும் அறிவதில்லை போலும். அதனாலே என்னவோ ஒருநாள் கொண்டாட்டத்துடன் எல்லாம் முடிந்துவிடுகின்றது.

பெண் என்பவள் எப்போதுமே போற்றப்படக்கூடியவள். பிறப்பின் மகத்துவத்தை உணர்த்தும் அவள் ஏற்க வேண்டிய துயரங்கள் தான் ஏராளம். அவர்களின் உண்மை நிலையினை அறிய வேண்டும். மலையகப் பெண்களின் விடிவு காலம் எப்போது என்று எல்லா பெண்களும் ஏக்கத்துடன் பார்க்கின்றனர். குடும்பத்தை உருவாக்கி சமூகத்துடன் ஒருங்கிணைந்து நாட்டினது பொருளாதாரத்துக்கு பங்களிப்பு செய்யும் பெண்களின் தேவை என்னவோ சொற்பம் தான். அதை நிறைவு செய்வதற்கு தான் இந்த அரசு முன்வருவதில்லை. முதலாளித்துவ ஆட்சியில் உழைக்கும் வர்க்கம் சுரண்டப்படுகிறது. மலையகத்தின் பெரும்பாலானா பெண்களும் உழைக்கும் வர்க்கத்தின் பிரதிநிதிகள்தான். மலையகப் பெண்களின் வாழ்வில் விடிவு வேண்டுமானால் சரியாக சிந்திக்க வேண்டும். அதற்கான காலம்தான் இது. எம் எதிர்பார்ப்பது கிடைக்காது என தெரிந்தும் காத்துக்கொண்டிருந்தால் நாம் ஏமாளிகள்தான். மனிதனை பொருளாக நினைக்கும் இத்தனை வருடங்களும் ஆட்சி அரியாசனத்தில் அமர்ந்த ஒவ்வொருவரும் புரிந்த அதே ஏமாற்று வித்தையை தான் அதே கும்பலைச் சார்ந்த புது முகங்களும் புரியும். இந்த முதலாளித்துவ கொள்கையைக் கொண்ட எல்லா அரசியல்வாதிகளும் இதையே தான் செய்வார்கள் என்பது ஆணித்தரமானவொன்று. ஆக, அனைவரையும் சரிசமமாக நடத்தும் அரசியலே உருவாக வேண்டும். வெறுமனே உழைப்புக்கும், உடம்புக்கும் பயன்படும் இயந்திரங்கள் அல்ல பெண்கள். அவர்கள் உணர்வுகளாலும் உரிமைகளாலும் மதிக்கப்படக் கூடியவர்கள்.

**வெட்கமானது விலகாத துணை தான்**

**வெறுத்தொதுக்காது வேட்கையாக்கி வெற்றி கொள்**

**வீரமது விரல் நுனிதான் வேண்டுமெனில்**

**வெகுண்டெழுந்து கொள்**

**உனக்கேற்ற தொரு உடைப்போட்டும் கொள்**

**அது என் வாழ்வை வினாவாக்காத விடையாக்கிக் கொள்**

**ஆணுக்காகத் தான் அவதரித்தாய்**

**அவனுக்கு அடங்கி கிடக்கவல்ல**

**அவனோடு இணைந்து ஆள்வதற்கு தானடி**

**பெண்ணே!**

# இப்பிறப்பும் இனிக்கிறதே!

தேசத்தின் விடியலுக்காய் தேகம் மெலிந்து
தேளுக்கும் பாம்புக்கும் இரையாகி
தேடுகின்றோம் மாற்றத்தை தினமும்
தேய்பிறையாய் வாடி இங்கு

எழுதப்படாத எமது விதியினை
எவரேனும் மாற்றி எழுதுவாரோ
என்ற நட்பாசையுடன்
ஏக்கங்களையும் ஏமாற்றங்களையும்
கூடைக்குள் சுமந்து - இங்கே
கூவி அழைக்கின்றோம்
காலம் காது கொடுக்கும் என்று.

காரியசித்தர்கள் கரங்களில்
கைவிரல்களாய் மாட்டியிங்கு
கைரேகைகளும் மாறியதே

மறுத்துப்போன மண்ணிலே
மனிதமதை தேடுவதில்
துளியேனும் பயனில்லை என்பதையறிந்தும்
துணிவுடன் போராடுகின்றோம்
தேயிலைக் காட்டினிலே

சாயம் உள்ளவரை
சப்பி சுவைக்கும் உலகினிலே
சாபம் தீரும் வரை சாம்பலிலும் எங்கள்
கனவுகள் கலந்தே இருக்கும்

ஏணியாய் இருந்தே
ஏற்றம் பல புரிந்த எம்மை
ஏளனமாய் பிறர் எண்ணுவதை
எண்ணிட
இப்பிறப்பும் இனிக்கிறதே.

**அ.பிரியா**
**நானுஓயா**



# வரவுசெலவின் உண்மைநிலையை தெளிந்த சிந்தனையுடன் விளங்கிக்கொள்வோம்!

நீங்கள் இந்த கட்டுரையை வாசிக்கும்போது அடுத்த 2024 ஆம் ஆண்டுக்காக ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்கின்ற வரவுசெலவு முன்மொழிவுகள் மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களாலும் ஏனைய உறுப்பினர்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும். இந்த வரவுசெலவுத் திட்டம் சுதந்திரமானதெனக் கூறப்படுகின்ற இலங்கையின் 75 வருட காலப்பபகுதிக்குள்ளேயும் திறந்த பொருளாதாரத்தின் 45 வருட காலப்பகுதிக்குள்ளேயும் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றாகும். எனினும் இது சுதந்திர இலங்கையின் 78 வது வரவுசெலவாகும். அதற்கான காரணம் 1960 இல் இரண்டு வரவுசெலவுகளும் அதன்பின்னர் ஒரு தருணத்திலும் இரண்டு வரவுசெலவுகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையாகும்.




இந்த விடயங்களைப் பார்க்கிலும் அடுத்த வருடத்தில் வரவுசெலவில் இடம்பெறுவது என்னவென்பதே எமக்கு முக்கியமானதாக அமைகின்றது. மக்கள் மீது வரிச்சுமையும் பொதுப்படுகடன் சுமையும் பாரியளவில் சுமத்தப்பட்டுள்ளமை சம்பந்தமான உரையாடல் முன்னணிக்கு வந்துள்ளது. ரணில் இந்த வரவுசெலவினை வாக்குறுதி வரவுசெலவாக சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் பல விடயங்களை உள்ளடக்கி இருந்தபோதிலும் சமூகத்தில் அதுபற்றிய எந்நதவிதமான உரையாடலும் உருவாகவில்லை. உண்மையிலேயே இந்த வரவுசெலவில் எத்தகைய நிலை உருவாகக்கூடும்? என்பதை விடய ஆதாரங்களுடன் ஆராய்வதே சாலவும் பொருந்தும். இந்த குறிப்பு அதற்கானதே.

எமது நாடு எந்த நிலையில் இருக்கின்றது என்பதை கணக்காய்வாளர் தலைமை அதிபதி நிதியமைச்சின் 2022

**பிரியதர்ஷன தயாரத்ன**

**தமிழில் : மகேந்திரன் கிறிஸ்டோபர்**

> மக்கள் மீது வரிச்சுமையும் பொதுப்படுகடன் சுமையும் பாரியளவில் சுமத்தப்பட்டுள்ளமை சம்பந்தமான உரையாடல் முன்னணிக்கு வந்துள்ளது. ரணில் இந்த வரவுசெலவினை வாக்குறுதி வரவுசெலவாக சமர்ப்பிக்கும் நோக்கத்துடன் பல விடயங்களை உள்ளடக்கி இருந்தபோதிலும் சமூகத்தில் அதுபற்றிய எந்நதவிதமான உரையாடலும் உருவாகவில்லை.

ஆம் ஆண்டுக்காக சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வெளிப்படுத்தி உள்ளார். உள்நாடு மற்றும் வெளிநாடு என்றவகையில் நாட்டின் படுகடன் அளவு 2,728,116 கோடி ரூபாவென வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகையான கடன்குவியலைப் பெற்றுள்ளபோதிலும் அதிலிருந்து பிறப்பித்துள்ள சொத்துக்களின் அளவு 480,380 கோடி ரூபா மாத்திரமே. இதன்மூலமாக கூறப்படுவது 2,247.736 கோடி ரூபா புறம்பாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளதென்பதாகும். இது எவ்வளவு பாரதூரமான அழிவுமிக்க நிலைமையாகும்? சொத்துக்களைப்போல் ஐந்துமடங்குகள் விஞ்சிச்சென்ற கடன் சுமையாகும்.

## வட்டி செலுத்துகின்ற பொறி

ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த வரவுசெலவுடன் "பொது நிதி முகாமைத்துவ அறிக்கை 2024" எனப்படுகின்ற அறிக்கையும் இருந்தது. இந்த அறிக்கையில் உள்ளடங்கிய தரவுகள் 2023 இன் முதல் 09 மாதங்களிலான உள்ளபடியான புள்ளிவிரங்கள் உள்ளடங்கியதாகும். அந்த ஆவணங்களில் கூறப்படுவது என்னவென்பதை விளங்கிக்கொண்டு எதிர்வரும் ஆண்டுக்கான மதிப்பீடுகள் பற்றி ஆராய்வது தர்க்கரீதியானதாகும். நிதி முகாமைத்துவ அறிக்கையில் 2022 இன் முதல் 09 மாதங்களில் அரசாங்கத்தின் மொத்த வருமானம் 145,038 கோடி ரூபா என கூறப்படுகின்றது. அதில் பொதுப்படுகடனுக்கான வட்டி செலுத்துவதற்காக மாத்திரம் 92,737 கோடி ரூபா செலவாகி உள்ளது. அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் வட்டி செலுத்துவதற்காக மாத்திரம் 63.49% செலவாகி உள்ளது. அரசாங்க வருமானம் ரூபா 100 எனில் வட்டி செலுத்துவதற்காக 64% செலவாகின்றமையாகும்.

குறிப்பாக அமைச்சர் பந்துல குணவர்தனவை முதன்மையாகக்கொண்ட அமைச்சர்கள் அடிக்கடி சுட்டிக்காட்டுவது அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செலுத்துதல் அரசாங்கத்திற்கு பாரிய சுமையாக அமைந்துள்ளதென்பதாகும். அவர்கள் அடிக்கடி மேற்கோள் காட்டுவது அரசாங்கத்தின் ஊழ்வினை அரச ஊழியர்களும் ஓய்வூதியம் பெறுநர்களுமே என்பதாகும். 2022 இன் முதல் 09 மாதங்களில் அவர்களின் சம்பளத்தைச் செலுத்துவதற்காக 94,290 கோடி ரூபாவுக்கு அண்மித்த தொகை செலவாகி இருந்தது. முன்னர் குறிப்பிட்ட அரசாங்கத்தின் மொத்த வருமானத்தின் 65.01% செலவாகியமையாகும். அரசாங்க வருமானம் ரூபா 100/- எனில் சம்பளத்திற்காகவும் ஓய்வூதியத்திற்காகவும் ரூபா 65/- செலவாகியமையாகும். மறந்துவிடாமல் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். வருமானம் 100/- எனில் வட்டியை செலுத்துவதற்காக மாத்திரம் ரூபா 64/- செலவாகின்றமையாகும்.

> **உள்நாடு மற்றும் வெளிநாடு என்றவகையில் நாட்டின் படுகடன் அளவு 2,728,116 கோடி ரூபாவென வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வளவு பெருந்தொகையான கடன்குவியலைப் பெற்றுள்ளபோதிலும் அதிலிருந்து பிறப்பித்துள்ள சொத்துக்களின் அளவு 480,380 கோடி ரூபா மாத்திரமே. இதன்மூலமாக கூறப்படுவது 2,247.736 கோடி ரூபா புறம்பாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளதென்பதாகும்.**

இந்த நிலைமை கழிந்துபோகின்ற 2023 ஆம் ஆண்டின் முதலாவது 09 மாதங்களில் எவ்வாறு இருக்கும்? அரசாங்க வருமானத்தை 211,875 கோடி ரூபா வரை அதிகரிப்பதில் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் வெற்றியீட்டியுள்ளது. அது எவ்வாறு என்பதை பின்னர் ஆராய்வோம். தற்போது அரசாங்கத்தின் இந்த வருமானத்தைக்கொண்டு கடன் வட்டியை செலுத்தவும் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செலுத்தவும் எவ்வாறு செலவாகின்றது என ஆராய்ந்து பார்ப்போம். அரச படுகடனுக்கான வட்டியை செலுத்த 173,734 கோடி ரூபா செலவாகி இருந்தது. ஒட்டுமொத்த அரச வருமானத்தின் சதவீதமாக 82.00% செலவாகும். அரச ஊழியரின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக 96,095 கோடி ரூபா செலவாகி இருந்தது. அரச வருமானத்தின் சதவீதமென்றவகையில் 45.35% ஆகும்.

இதுவரை பேசப்பட்ட மூன்று தரவுகள் பற்றி எளிமையாக மீளாய்வு செய்வோமேயானால் அதனை எவ்வாறு செய்வது? அரசாங்க வருமானம் ரூபா 100/- எனில் கடன் வட்டியை செலுத்துவதற்காக மாத்திரம் செலவாகின்ற பணத்தொகை ரூபா 82/- ஆகும். 2022 இல் அதற்காக செலவாகியிருந்த தொகை ரூபா 64/- ஆகும்.




அது ரூபா 82/- வரை அதிகரித்துள்ளது. அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளத்தையும் ஓய்வூதியத்தையும் செலுத்துவதற்காக 2023 இன் முதல் 09 மாதங்களில் (வருமானம் ரூபா 100/- ஆகும் போது) ரூபா 45.35 செலவாகி இருந்தது. 2022 இல் அரசாங்க வருமானம் ரூபா 100/- ஆக அமைகையில் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளத்தையும் ஓய்வூதியத்தையும் செலுத்துவதற்காக செலவாகி இருந்த ரூபா 65/- பணத்தொகை 2023 இல் ரூ. 45.35 வரை வீழ்ச்சியடைந்திருந்தமையாகும்.

## இதோ வரிக் களியாட்டம்

அரசாங்க வருமானம் 2022 ஆம் ஆண்டைவிட 2023 ஆம் ஆண்டில் எவ்வாறு அதிகரிக்கப்பட்டதென்பதை இப்போது சுருக்கமாகப் பார்ப்போம். "பொது நிதி முகாமைத்துவ அறிக்கை 2024" மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சில தரவுகள்மீது கவனத்தைச் செலுத்துவது முக்கியமானதாகும்.

"உள்நாட்டு நுகர்வினை அடிப்படையாகக்கொண்ட வரி" என ஒருதொகுதி வரி அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இந்த பெயர்கொண்டு அழைப்பதன் மூலமாக அனைத்துமே தெளிவாகின்றது. 2022 இன் முதலாவது ஒன்பது மாதங்களில் இந்த வரி வருமானம் 40,591 கோடி ரூபாவாகும். 2023 இல் அக்காலப்பகுதிக்குள் அது 64,093 கோடி ரூபாவரை உயர்வடைந்துள்ளது. 2022 ஐ பார்க்கிலும் இந்த வரி அதிகரிப்பு 70.17 சதவீதமாகி இருக்கின்றது. அதைப்போலவே இறக்குமதியை அடிப்படையாகக்கொண்ட வரி 2022 இன் முதல் 09 மாதங்களில் 41,105 கோடி ரூபாவில் இருந்து 2023 இல் 54,922 கோடி ரூபா வரை 30.57 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. எமக்கு தினசரி அத்தியாவசியமான உணவுப் பொருட்களிலிருந்து அனைத்து நுகர்வுப் பொருட்கள்மீதும் இவ்விதமாக வரிக் குவியல் சுமத்தப்பட்டுள்ளது. இந்த வரி நேரில் வரிகளாகும். நேர்வரி என்றவகையில் உழைக்கும்போதே செலுத்துகின்ற வரி தற்போது வரையறையற்றவகையில் உயர்த்தப்பட்டுள்ளது. 2022 முதல் 09 மாதங்களில் 1,791 கோடி ரூபாவில் இருந்து 2023 இல் 10,704 கோடி ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி அதிகரிப்பு 497.78 சதவீதமாகும். வேறுவிதமாகக் கூறுவதாயின் ஐந்து மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளமையாகும்.

இவ்விதமாக நேர்வரிமத்தியில் மேலும் முதன்மையாகக் காணப்படுவது மக்களின் சேமிப்புக் கணக்குகளுக்கு கிடைக்கின்ற வட்டி மீது வரி விதிக்கப்படுவதாகும். இந்த சேமிப்புகளில் பாரியளவில் நிலவுவது இளைப்பாறியவிடத்து பெற்றுக்கொண்ட சேமலாப தொகைகளாகும். 2022 முதல் 09 மாதங்களில் 1,429 கோடி ரூபாவிலிருந்து 2023 முதல் 09 மாதங்களில் 11,042 கோடி ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அது கடந்த வருடத்தைப் பார்க்கிலும் 672.72 சதவீத அதிகரிப்பாகும். இவ்விதமாகவே அரசாங்கத்தின் வரி வருமானம் உயர்த்தப்பட்டிருந்தது.

> அரசாங்கம் இந்த வருடத்தில் இலக்காகக்கொண்டுள்ள (திருத்திய) வரி வருமானம் 259,600 கோடி ரூபாவாகும். அது அடுத்த வருடத்தில் 382,000 கோடி ரூபாவாக உயர்த்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. வேறுவிதமாகக் கூறுவதாயின் இந்த வருடத்தின் வரி வருமானத்தைப் பார்க்கிலும் 47.14 சதவீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளமையாகும்.

### அடுத்த வருடத்தில் வரிகளும் கடன்வட்டியும்

நாட்டில் வெகுசன போராட்டமொன்றினால் கோட்டாபய ராஜபக்ஷ விரட்டியடிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டினைவிட பின்தொடர்ந்த ஜனாதிபதியின்கீழ் வட்டி எரிமலை அமுலாக்கப்பட்ட விதத்தையும் குத்தகை வட்டி எவ்வாறானதாக அமைந்திருந்ததென்பதையும் நன்றாக விளங்கிக்கொண்டு அடுத்த வருடத்திற்காக வரவுசெலவு மூலமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தரவுகள் பற்றி ஆராய்ந்து பார்ப்போம். வரவுசெலவு உரையில் இருப்பது இந்த முக்கியமான கதைகளன்றி வெறும் பூச்சாண்டிக் கதைகளாகும். அரசாங்கம் சமர்ப்பிக்கின்ற இலக்குகள் பற்றிய உண்மைக்கதை இருப்பது வரவுசெலவு மதிப்பீடு மற்றும் அதனோடு தொடர்புடைய ஆயிரக்கணக்கான பக்கங்களைக்கொண்ட அறிக்கைகளிலாகும்.

மேற்படி மதிப்பீடு மற்றும் அறிக்கைகளில் நிலவுகின்ற வரி மற்றும் கடன் சம்பந்தமான விடயங்கள் எமது வாழ்க்கைமீது நேரடியாகவே தாக்கமேற்படுத்துகின்றன. அதனால் அந்த தரவுகள் எத்தகையவை என ஆராய்வதற்காக இந்த அத்தியாயம் ஒதுக்கப்படுகின்றது. கடந்த 2022 ஆம் ஆண்டைவிட 2023 ஆம் ஆண்டில் வரிச்சுமை அதிகரிக்கப்பட்டுள்ள விதத்தையும் மிகப்பெரிய அளவினை கடன் வட்டியாக செலுத்தவேண்டி நேர்ந்துள்ள விதத்தையும் நன்றாக மனதில் வைத்துக்கொண்டு அரசாங்கத்தின் எதிர்கால இலக்குகள் பற்றி ஆராய வேண்டும். அரசாங்கம் இந்த வருடத்தில் இலக்காகக்கொண்டுள்ள (திருத்திய) வரி வருமானம் 259,600 கோடி ரூபாவாகும். அது அடுத்த வருடத்தில் 382,000 கோடி ரூபாவாக உயர்த்தப்பட எதிர்பார்க்கப்படுகின்றது. வேறுவிதமாகக் கூறுவதாயின் இந்த வருடத்தின் வரி வருமானத்தைப் பார்க்கிலும் 47.14 சதவீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளமையாகும். அது எமது வாழ்க்கையில் எவ்வாறு தாக்கமேற்படுத்துகின்றது என்பதை தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டியது முக்கியமானதாகும். பொருளாதாரம் பற்றிப் பேசுகையில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி பற்றி பெரும்பாலும் குறிப்பிடப்படுகின்றது. ஒருவருடத்திற்குள் நாடு என்றவகையில் பிறப்பிக்கப்பட்ட பொருளாதாரப் பெறுமதிகள் அனைத்தினதும் கூட்டுத்தொகையை அந்நாட்டின் சனத்தொகையால் வகுப்பதாகும். அப்போது அந்த வருடத்தில் ஒருவருக்காக ஒதுக்கப்படுகின்ற பொருளாதாரத்தின் பங்கு கிடைக்கும்.

இவ்விதமாக அடுத்த வருடத்தில் அரசாங்கம் எதிர்பார்க்கின்ற மொத்த வரி வருமானத்தை நாட்டின் சனத்தொகையால் வகுத்து ஓர் ஆளின்மீது சுமத்தப்படுகின்ற வரியின் பங்கு எவ்வளவு எனப் பார்ப்போம். சனத்தொகை அண்ணளவாக இரண்டுகோடியே இருபது இலட்சமாகும். எதிர்பார்த்துள்ள வரி இலக்கினை சனத்தொகையால் வகுத்தவிடத்து 2024 இல் அரசாங்கம் பெற்றுக்கொள்ள இலக்காகக்கொண்டுள்ள தலைக்குரிய வரித்தொகை ரூபா 173,636/- ஆகும். அது ஒரு நாளுக்கு எவ்வளவு எனப் பார்த்தால் ஒருவர் ஒரு நாளுக்கு ரூபா 475/- வரித்தொகையைச் செலுத்தவேண்டும். வட்டி எரிமலை படுவேகமாக உயர்வடை[ந்து] வருகின்றதோடு 2024

> தேர்தல் வாக்குறுதிகளுடனோ அல்லது அவ்வாறு இல்லாமலோ சமர்ப்பித்த 78 வரவுசெலவுகள் ஊடாக நாடு பயங்கரமான அழிவைநோக்கியே கொண்டுவரப்பட்டுள்ளது. அதே பாதையில் மேலும் முன்நோக்கி நகர்ந்து இந்த இடத்தில் நிற்கப்போகிறோமென்பதை கூறவல்லவர் எவரேனும் உள்ளாரோ?



ஆம் ஆண்டில் அது 265,100 கோடி ரூபாவாக அமையுமெனவும் அரசாங்கம் கூறுகின்றதென இந்த குறிப்பின் தொடக்கத்திலேயே காட்டினோம். இதன்படி இற்றைவரை நிலவிய அரசாங்கங்கள் பெற்றுள்ள கடன் வட்டிக்காக அடுத்த வருடத்தில் வட்டி மாத்திரம் இவ்வளவு பெரிய தொகையாகும். அது நாட்டின் சனத்தொகையில் ஒரு நபர்மீது சுமத்தப்பட்டுள்ள அளவு எறக்குறைய 120,500 ரூபாவாகும். ஒரு நாளுக்கு ரூபா 330/- வரி செலுத்துதலாகும்.

இதில் ஒன்று மிகவும் நன்றாகத் தெளிவாகின்றது. ஒரு நபர் நாளொன்றுக்கு ரூபா 475/- வரி செலுத்துகையில் இதில் ரூபா 330/- வட்டி செலுத்துவதற்காகவே செலவாகின்றது. இவ்வாறு இருக்கையில் அடுத்த வருடத்தில் மொத்தமாக ரூபா 735,000 கடனைப்பெற ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது. அதற்கிணங்க மக்கள் மீது வட்டி மென்மேலும் குவிகின்ற விதத்தை நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஏனெனில் அடுத்த வருடத்தில் பெற மதிப்பீடு செய்துள்ள 735,000 கோடி ரூபாவிற்காக 2025 ஆம் ஆண்டிலேயே வட்டி செலுத்த நேரிடும். அடுத்த 2024 இல் வட்டி செலுத்துவதற்கு மேலதிகமாக கடன் தவணைகளையும் செலுத்தவேண்டியுள்ளது. கடன் தவணைகளாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக 691,000 கோடி ரூபா செலுத்தவேண்டி வருமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடன் தவணைகளைச் செலுத்த 426,800 கோடி ரூபாவாகும். இவ்விதமாக கடன் தவணையையும் வட்டியையும் செலுத்துவதற்காக ஏழு இலட்சம் கோடி ரூபாவிற்கு கிட்டிய தொகை செலவாகியபோதிலும் அரசாங்கம் மதிப்பீடுசெய்துள்ள மொத்த வருமானம் எவ்வளவு? அது 416,400 கோடி ரூபாவாகும். இந்த வருடத்தில் மதிப்பீடு செய்துள்ள வருமானத்தில் குறைந்தபட்சம் 15 % கூட கிடைக்கமாட்டாதென்பது உறுதியாகிவிட்டது. அடுத்த வருடத்திலும் இது அதனைவிட மாற்றமடைய முடியாது. எனினும் கடன் வட்டியை செலுத்துவதற்காக செலவாகின்ற 265,100 கோடி ரூபா வீழ்ச்சியடைய மாட்டாது. வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்பு செய்துகொள்ளல் வெற்றியளித்தால் அடுத்த வருடத்தில் செலுத்த நேரிடுகின்ற கடன் தவணைத் தொகையில் ஓரளவு வீழ்ச்சிப்போக்கு இடம்பெறும். அது பெரும்பாலும் ஐயப்பாடானது. கடனை மறுசீரமைத்துக் கொண்டாலும் வருங்காலத்தில் அதனை மொத்தமாகச் செலுத்தவேண்டி நேரிடும்.

நிலவுகின்ற ஒருசில தரவுகளைச் சார்ந்ததாக ஆராய்ந்தால் நிலவுகின்ற யதார்த்தம் இதுவாகும். தேர்தல் வாக்குறுதிகளுடனோ அல்லது அவ்வாறு இல்லாமலோ சமர்ப்பித்த 78 வரவுசெலவுகள் ஊடாக நாடு இவ்வாறான பயங்கரமான அழிவைநோக்கியே கொண்டுவரப்பட்டுள்ளது. அதே பாதையில் மேலும் முன்நோக்கி நகர்ந்து இந்த இடத்தில் நிற்கப்போகிறோமென்பதை கூறவல்லவர் எவரனும் உள்ளாரோ? இந்த அழிவுமிக்க பாதையில் இருந்து விடுபடுவதற்கான தீர்வுக்கட்டமான வருடமாக 2024 ஐ வரலாற்றில் சேர்க்க வேண்டுமல்லவா?

# சரிகமபா மேடையில் வெடித்த
# குடியுரிமை விவகாரம்

- செந்தூரன் -



தமிழகத்தின் Zee தமிழ் தொலைக்காட்சி அலைவரிசையால் நடாத்தப்படும் "சரிகமபா" இசைப்போட்டியொன்றில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு நடிகர் சத்தியராஜ் கூறிய கூற்று மலையகத்தில் பெரும் பரபரப்பையே ஏற்படுத்தியிருந்தது. நடிகர் சத்தியராஜ் இலங்கையில் மலையக மக்களுக்கு இன்னும் குடியுரிமை வழங்கப்படவில்லை என்றும், மலையக மக்களுக்கு குடியுரிமையை வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார். இந்த விடயம் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. ஏனெனில், இந்திய வம்சாவளிகளான மலையகத் தமிழருக்கு இலங்கையில் குடியுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் புரிதலோ அல்லது அறிவோ இல்லாமலேயே தானறிந்த நான்கு விடயங்களை நடிகர் சத்தியராஜ் சரிகமபா சிறப்பு அதிதி கதிரையில் அமர்ந்துகொண்டு பேசிக்கொண்டிருந்தார். அப்போது, அசானியின் தந்தையிடம் "இன்னமும் உங்களுக்கு இலங்கை அரசாங்கம் குடியுரிமை வழங்கவில்லைதானே?" என்று கேட்க, அதற்கு பாமரரான அசானியின் தந்தை "இல்லை!" என்று தலையாட்டினார். இந்த விவகாரம் அசானி மற்றும் அவரது தந்தைக்கு எதிரான கருத்துக்களையும் உருவாக்கியிருந்தது. உண்மையில், இந்த விடயத்திற்கும் இவர்களுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது! அசானியின் தந்தை பாமரராக இருப்பதற்கும், அசானி போன்ற திறமைசாளிகளுக்கு இலங்கையில் சரிகமபா போன்ற மேடை இல்லாததற்கும் அல்லது அமைத்துக் கொடுக்கப்படாததற்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் அந்த அப்பாவிகள் அல்ல! இலங்கை அரசாங்கமும் அரசியலும் ஆகும். ஆக, தனக்கான வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்திக்கொண்டே அசானி இன்று வளர்ந்து நிற்கிறார். அவரது வளர்ச்சியில் மலையகத்தைச் சேர்ந்த பலரின் பங்களிப்பு இருக்கிறது. அவர்களது அன்பும் ஆதரவும் தான் அசானியை அந்த மாபெரும் மேடையை நோக்கி கொண்டு சென்றது. அவரின் மூலமாகத்தான் மலையகம் இன்று பேசுபொருளாக மாறியிருக்கிறது.

ஏனெனில், அண்மைக்காலம் வரை இலங்கையில் வாழும் மலையகத் தமிழர் பற்றி தமிழக மக்கள்



**அசானியின் தந்தை பாமரராக இருப்பதற்கும், அசானி போன்ற திறமைசாளிகளுக்கு இலங்கையில் சரிகமபா போன்ற மேடை இல்லாததற்கும் அல்லது அமைத்துக் கொடுக்கப்படாததற்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் அந்த அப்பாவிகள் அல்ல! இலங்கை அரசாங்கமும் அரசியலும் ஆகும். ஆக, தனக்கான வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்திக்கொண்டே அசானி இன்று வளர்ந்து நிற்கிறார். அவரது வளர்ச்சியில் மலையகத்தைச் சேர்ந்த பலரின் பங்களிப்பு இருக்கிறது. அவர்களது அன்பும் ஆதரவும் தான் அசானியை அந்த மாபெரும் மேடையை நோக்கி கொண்டு சென்றது. அவரின் மூலமாகத்தான் மலையகம் இன்று பேசுபொருளாக மாறியிருக்கிறது.**




அவ்வளவாக அறிந்திருக்கவில்லை. இலங்கையில் வாழும் தமிழர்கள் என்றால், அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றே எண்ணிக்கொண்டிருந்தனர். கிழக்கைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் பற்றி புரிதலும் பெரியளவில் அங்கு கிடையாது. ஆக, அசானி மூலமாகத்தான் மலையகத்தின் ஒடுக்கப்பட்டோரின் குரல் அரங்கத்திற்கு வந்திருக்கிறது. இது அத்தனையும் சாதாரண குடும்பப் பின்னணியைக் கொண்ட அசானியின் திறமையால் கைக்கூடியிருக்கிறது.




ஆனால், தமிழகத்தின் பெரும் ஊடகங்களை நாம் விளையாட்டு பொருளாக கருதமுடியாது. ஏனெனில், அவை பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதுடன், மக்களையும் அரசியலில் இருந்து துண்டித்து மாய உலகில் வைத்துக்கொள்ள போராடிக் கொண்டிருக்கிறது. தமது டீஆர்பி ஐ ஏற்றிக்கொள்வதற்கு அவை போட்டிப்போட்டுக் கொண்டிருக்கின்றன. ஆக, அந்த டீஆர்பி போட்டி காரணமாக பெருத்த இந்திய ஊடகங்கள் எந்தவிடத்திற்கும் செல்வதற்கு தயாராக இருக்கிறார்கள். இப்படியாகத்தான் காலங்காலமாக இருந்து வந்த கட்டுப்பாடுகளை தகர்த்து அவர்கள் ஒடுக்கப்பட்ட, சாதாரண பின்புலம் கொண்ட மக்கள் மத்தியிலும் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களது பயணம் அந்த ஏழை மக்களின் அரசியல் நன்மைகளை பெற்றுக்கொடுப்பதற்காக மேற்கொள்ளப்படுவதல்ல, மாறாக டீஆர்பி ஐ குறிவைத்திருக்கிறது. அந்தவகையில்தான், ஹிசாலினி மூலமாக மலையக மக்களின் குடியுரிமை குறித்த விடயமும் அரங்கிற்கு வந்தது. மலையக மக்களுக்கு இன்னமும் குடியுரிமை வழங்கப்படவில்லை என்ற தவறான கூற்று பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அடித்தட்டு மலையகத் தமிழரின் நிலைமைகளை இந்நிகழ்ச்சி உலகத் தமிழ்ச் சனத்திடம் கொண்டு சென்றிருக்கிறது.

இலங்கையில் மலையகத் தமிழர்களின் வாழ்வை நோக்கும்போது எம் மக்கள் இன்னமும் இந்நாட்டின் பிரஜைகளாக நடத்தப்படவில்லை என்பதில் ஒளிவு மறைவு இல்லை. ஆனாலும், மலையகத் தமிழர் இலங்கைச் சட்டத்தின்படி தற்போது பிரஜைகளாக

அங்கிகரிக்கப்பட்டிருக்கின்றனர். இருப்பினும் எம் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்றுத் துரோகங்களை கண்டும் காணாமல் சென்றுவிட முடியாது.

மலையகத் தமிழரின் குடியுரிமை விவகாரத்தை நோக்கும்போது, முதன்முதலில் எம் மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது கறுப்பு வெள்ளையரிடம் நாட்டின் அதிகாரப்பொறுப்பு வந்தபோதாகும். இலங்கையின் முதற் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கவினால் கொண்டுவரப்பட்ட 1948 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க குடியுரிமைச் சட்டத்தின்படி மலையகத் தமிழரின் குடியுரிமை பறிக்கப்பட்டது. 1949 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தில் குடியுரிமை இல்லாதவர்களுக்கு வாக்கு அளிக்கும் உரிமை இல்லை என்று இருந்ததன் மூலம் மலையகத் தமிழர் வாக்குரிமையையும் இழந்தனர்.1949 ஆம் ஆண்டு 3 ஆம் இலக்க இந்தியா – பாகிஸ்தான் பிரஜைகளுக்கான குடியுரிமை சட்டத்தின்படி உயரடுக்கைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்பட்டது. சாதாரண மலைகச் சனத்துக்கு குடியுரிமை வழங்கப்படவில்லை. இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் நாடற்றவர்களாக மாற்றப்பட்டனர். 1986 ஆம் ஆண்டு 8 ஆம் இலக்க நாடற்றவர்களுக்கான குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியால் பறிக்கப்பட்ட குடியுரிமை அதே ஐக்கிய தேசியக் கட்சியால் வழங்கப்பட்டது. 1948 இல் மலையக மக்களின் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்காமல் இடதுசாரிகளுக்கு கிடைத்தது. அதனால் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. ஆனால், 1988 இல் மலையக மக்களின் வாக்குளை ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டு தம் வசப்படுத்தியிருந்தது. அதனால், குடியுரிமையும் வாக்குரிமையும் மீள கொடுக்கப்பட்டது. இருப்பினும் குடியுரிமை பிரச்சினை முற்றிலுமாக தீர்க்கப்பட்டது 2009 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்கச் சட்டத்திலாகும். மக்கள் விடுதலை முன்னணியின் பங்கு இதில் பிரதானமானதாகும். இச்சட்டத்தின் மூலம் நாடற்றவர் நிலையில் இருந்து மலையகத்தில் இருந்து வன்னி, கிளிநொச்சி பகுதிகளுக்கு குடியேறி, யுத்தம் காரணமாக அங்கிருந்து தமிழ்நாட்டுக்கு அகதிகளாகச் சென்ற 28,459 பேருக்கு இலங்கை திரும்பினால் குடியுரிமை வழங்கப்படும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

**இந்திய வம்சாவளி மலையகத் தமிழருக்கு இலங்கையில் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ள விடயம் கூட தெரியாமல் மலையகத் தமிழருக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கூறி டீ.ஆர். பிக்காக கொந்தளிக்கும் தமிழ்நாட்டு முதலாளித்துவ ஊடகம், இந்தியாவில் வாழும் குறிப்பாக தமிழ்நாட்டில் அகதிகளாக வாழும் இலங்கையருக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்கப்படாமை குறித்து ஏன் கேள்வி எழுப்புவதில்லை. முதலில் நீங்கள் அந்தவிடயத்தில் அக்கறையை காட்டுங்கள். இவ்வாறான விடயங்களையும் அரங்கத்திற்கு கொண்டுவாருங்கள். வெறுமனே டி.ஆர். பிக்காகவும் இலாபத்திற்காகவும் மாத்திரம் கொக்கரிப்பதை நிறுத்துங்கள்.**



இந்திய வம்சாவளி மலையகத் தமிழருக்கு இலங்கையில் பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ள விடயம் கூட தெரியாமல் மலையகத் தமிழருக்கு குடியுரிமை வழங்கப்பட வேண்டும் எனக் கூறி டீ.ஆர். பிக்காக கொந்தளிக்கும் தமிழ்நாட்டு முதலாளித்துவ ஊடகம், இந்தியாவில் வாழும் குறிப்பாக தமிழ்நாட்டில் அகதிகளாக வாழும் இலங்கையருக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்கப்படாமை குறித்து ஏன் கேள்வி எழுப்புவதில்லை. முதலில் நீங்கள் அந்தவிடயத்தில் அக்கறையை காட்டுங்கள். இவ்வாறான விடயங்களையும் அரங்கத்திற்கு கொண்டுவாருங்கள். வெறுமனே டி.ஆர். பிக்காகவும் இலாபத்திற்காகவும் மாத்திரம் கொக்கரிப்பதை நிறுத்துங்கள்.

இறுதியாக, தன் திறமை மூலம் இசையுலகில் இடம்பிடித்து மலையகத்தின் புகழை ஓங்கச் செய்த நம் மலையக மண்ணின் இசை தாரகை அசானியை வாழ்த்தி மகிழ்கிறோம். அவர் மேலும் இசையின் உச்சத்தை தொட பிரார்த்திக்கிறோம்.

# குடியுரிமை



**எம். ராமதாஸ்**
**இறம்பொடை**

உலகமே நித்திரையில் விழித்ததாகத்தான் இந்த மலையகம் இருநூறு காணப்படுகிறது. இந்த இருநூறு வருட காலப்பகுதியில் இப்படியாகவாவது பேசப்பட்டோமே என்பது ஒருவகையில் ஆறுதல்தான். இந்தியாவை பற்றி நாம் அதிகம் பேசவேண்டிய தேவை இல்லை எமது இன்றைய தேசிய ஸ்தீர தன்மையற்ற இருப்புக்கும், குடியுரிமை என்றால் என்ன? எமக்கு அது இருக்கிறதா என்ற தெளிவின்மையில் நாம் இருப்பதற்கும் மிகமுக்கிய பங்கு இந்தியாவிற்கு இருக்கின்றது.

எம்மை எமக்கே தெரியாமல் எப்படி எமது அரசியல் சமுகம் எம்மை கட்டுப்படுத்தி வைத்திருக்கிறதோ அதைபோலத்தான் அன்று இந்தியாவும் செய்தது. சிரிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் ஊடே தமிழகம் சென்ற மலையக தமிழர்களுக்கு அண்மையில்தான் இந்திய உயர்நீதிமன்றம் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுத்திருக்கின்றது. தாயகம் திரும்பல் என்ற ரீதியில் அமைந்த அந்த நாடுகடத்ததலில், சென்ற மக்களுக்கான குடியுரிமையே இது நாள்வரை நாம் தாயகம் என்று சொல்லக்கூடிய மண்ணே தரவில்லையே.

தமிழீழம் தொடர்பிலும் வடக்கு கிழக்கு பிரச்சினைகள் தொடர்பிலும் முனைபுக்காட்டி வந்த இந்தியா மலையகம் தொடர்பில் குரல்கொடுக்க இந்த இருநூறு வருடமாக அசானியின் குரல் ஒலிக்கும் வரை காத்திருந்தது ஏன்?

தமிழக அரசியல்வாதிகளின் அரசியல் பிழைப்புக்காக வடக்கு கிழக்குக்கு குரல் எழுப்ப வேண்டியிருந்தது. மலையகத்தை பற்றி பேசவேண்டிய தேவையோ புரிதலோ அவர்களுக்கு இருக்கவும் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. இதுவே நிதர்சனம். இந்திய தொலைக்காட்சிகள் கூட எமது மலையக அரசியல்வாதிகளை போல மிகச்சிறந்த வர்த்தகத்தை தான் செய்கிறது. அவர்களுக்கு வருமானம் வரும் என்றால் மலையக மக்கள் இந்தியாவை பூர்வீகமாக கொண்டவர்கள் இல்லை என வாதிடவும் தயங்க மாட்டார்கள். இதுவே அவர்களுடைய வனிகம்.

இன அடையாளம் என்ற ரீதியிலே பிரஜாவுரிமை அற்ற சமுகமாகத்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதை நான் உள்ளிட்ட பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அதுவே உண்மை. வாக்குரிமை, பேச்சுரிமை என பல இருந்தும் இன்றும் தேசிய ரீதியில் இந்திய வம்சாவழி தமிழர் என்ற ரீதியில்தான் வந்தேறிய மக்கள் என்ற அடையாளத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இதற்கு அரசாங்கமும் அரசியல்வாதிகளும் மட்டும் காரணமல்ல, மக்களாகிய எமக்கும் பாரிய பங்குண்டு. நம்மில் எத்தனை பேர் இதற்காக குரல் உயர்த்தி இருப்போம்.

வெறும் சலுகைகளுக்காகவும் தேவைகளுக்காகவும் எமது தேசிய இன அடையாளத்தை புதைத்தில் நாம் தான் முதலில் நிற்கின்றோம். இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தை அரசியல்வாதிகள் மாற்றாமல் இருக்க அரசியல் தந்திரமே காரணம். அதற்கு இன்று வரையில் நாம் பகடைகளாக நிற்கின்றோம். குடியுரிமை வழங்கப்பட்டால், நிலவுடைமை, சரிநிகர் தேசிய உரிமை வழங்க வேண்டும். நாம் எழுந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க நேரிடும். இது நடந்து விட கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் விருப்பமாக இருக்கிறது. மறைமுகமாக இதற்கு நாம் சார்பாக நிற்கின்றோம்.

இந்த இருநூறாம் வருடத்திலாவது எமது சமுகத்தின் மீதான தெளிவை நாம் பெறவேண்டும்.தேசிய ரீதியில் இந்தியத் தமிழர் என்ற நாமம் ஒழிந்து மலையக தமிழரென அடையாளப்படுத்தப்பட வேண்டும். மொழி, கலை கலாச்சார ரீதியில் இலங்கை தீவிலே தனியொரு வின்மீனாக மிளிரவேண்டும். சலுகைகளுக்கு தலைசாய்க்கும் நிலை ஒழியவேண்டும். அப்போதுதான் மலையகம் முன்னூறிலாவது எமது புலம்பல் கொஞ்சம் அடங்கி இலங்கையராக நாம் எழுந்து நிற்போம்.

**“இன்று வரை நாம் பிரஜாவுரிமை அற்றவர்கள் தான்”.**



# மலையக பெண் கவிஞர்களின் படைப்புக்களில் பால்நிலை வெளிப்பாடு

மாரிமுத்து சசிரேகா

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக அழைத்து வரப்பட்ட மக்கள் கூட்டத்தினரோடு மலையகச் சமூகம் தோற்றம் பெறலாயிற்று என்பது யாவரும் அறிந்த உண்மை. அவர்களால் உருவாக்கிக் கொள்ளப்பட்ட சமூக பண்பாட்டுத் தளத்திற்கு 200 ஆண்டுகால வரலாறு பேசப்படுகின்றது. வலியுடன் காலூன்றி வாழும் எம் மக்களிடம் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தின் பின்னர் இலக்கிய முயற்சிக்கான அடித்தளம் மெது மெதுவாக துளிர் விடத் தொடங்கியது. ஆரம்பக்காலங்களில் மலையக இலக்கியத்தில் ஆண் படைப்பாளர்களே தங்களின் சமூகப் பிரச்சினைகளை கவிதை, சிறுகதை, நாவல் படைப்புகளினூடக வெளிக்கொணர்ந்தனர். 1935களில் தொழிற்சங்க ரீதியில் மலையக பெண்களுக்காக மீனாட்சியம்மை நடேசையர் குரல் கொடுத்தார். அதற்குப் பிறகு மலையகப் பெண்களின் துயர் சூழ்ந்த வாழ்க்கைக் கோலங்களை ஆண் படைப்பாளர்கள் வெளிக்கொணர்ந்தனர். அவை எம் மக்களின் பாடுகளை உலகறியவும் செய்தன எனில் மிகையாது. இங்கு குறிப்பிட்டு காட்டப்பட வேண்டிய அம்சம் என்னவெனில், ஆண் தன் நிலைப்பாட்டில் இருந்து பெண் குறித்து பேசுவதை விட பெண்களுடைய பிரச்சினைகள் எவ்வளவு தூரம் பெண்களுடைய குரலாக வெளிப்படுகின்றது என்பதே முக்கியத்துவமாக அமைகின்றது. அதன் அடிப்படையில் 1980க்கு பின்னர் உயர்கல்வித் துறையில் ஏற்பட்ட வாய்ப்புக்களினால் சிறிது சிறிதாக பெண் கவிஞர்கள் வெளிவரப்பட்டனர். பல்கலைக்கழகங்களில் உள்வாங்கப்பட்ட பெண்கள் அங்கு கிடைக்கப்பெற்ற வாய்ப்புக்களைச் சரியாக பயன்படுத்திக் கொண்டு, தங்களுடைய பிரச்சினைகளை எழுத தொடங்கினர். இந்த எழுத்து முயற்சி நூலாக்கங்களாகவும் வெளிவந்தன. இருப்பினும் இப்படைப்புக்கள் தொடர்ச்சியாக வெளிவந்தனவா என்பது வினாவாகவே அமைகின்றது. அவ்வாறு எழுதப்பட்ட கவிதைகளில் மலையக வாழ்வியல் அம்சங்கள் மற்றும் பால்நிலை கருத்தியலை உள்ளடக்கிய ஒரு சமூக இயக்கததில் அவர்கள் எவ்வாறு செயற்படுகின்றனர்? குறிப்பாக பெண்களின் சமூக பிரச்சினைகள் எவ்வளவு தூரம் வெளிவந்துள்ளன? அவற்றில் பால்நிலை வெளிப்பாடுகள் யாவை? ஏன்பதை கூறுவதாக இக்கட்டுரை நோக்கமாக அமைகின்றது.

1935களில் தொழிற்சங்க ரீதியில் மலையக பெண்களுக்காக குரல் கொடுத்தவர் மீனாட்சியம்மை

ஆவார். அவரின் குரல் வழி மலையக நிலத்தில் இரவு, பகலும் பாடுப்பட்ட பெண்களின் துயர் சூழ்ந்த வாழ்வும், சமூகசார் பிரச்சினைகளும் வெளிவரத் தொடங்கின. அடக்குமுறைக்குள் உள்வாங்கப்பட்ட பெண்களின் குரல், ஆணாதிக்க ஒடுக்கு முறைகளை மனதில் நிரப்பியும், கொழுந்துக்கூடையை முதுகில் சுமந்தும், குடும்பச் சுமையை தலையில் சுமந்தும் வாழும் மலையக பெண்களின் பாரம் இன்று சிறிது குறைந்திருந்தாலும் முழுமையாக வேரறுக்கப்படவில்லை. வலியுடன் ஆயிரம் ரூபாய் ஏமாற்றத்தில் மலைகளை கடக்கும் ஒவ்வொரு தாய்மார்களின் பெரு மூச்சிலும் அவர்களின் ஏமாற்றங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது எனலாம்.

மலையக பெண்களின் பாடுகளைப் பற்றி சி.வி.வேலுப்பிள்ளை, குறிஞ்சித் தென்னவன் முதலியோர் கவிதைகளை பாடிருந்தாலும், பெண்களின் பிரச்சினைளை பெண்களின் குரல் வழியாக கேட்கும் போது மாபெரும் சக்கி பிறக்கின்றது. மலையகச் சூழலில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே பெண் கவிஞர்கள் காணப்படுகின்றனர் என்பதே நிதர்சனம். 1980க்கு பிறகு ஏற்பட்ட உயர்கல்வி வாய்ப்புக்கள், பல்கலைக்கழக பிரவேசம், அவ்விடத்தில் அவர்கள் அதை சரியாக பயன்படுத்திக் கொண்டமை எழுத்துலகத்திற்கு கால்பதிக்க வைத்தது. அந்த வரிசையில் சந்திரலேகா கிங்ஸ்லி, நாகபூசணி, மஞ்சுளா, எஸ்தர் லோகநாதன், சண்முகப்பிரியா, இஸ்மாலிகா, இராகலை தயானி, சர்மிளாதேவி போன்றோரைப் பதிவிடலாம். அவர்களுக்கான தளத்தை கலையருவி, தேட்டம், வடம், புதியபூமி, தாயகம், லயம், அகல், சக்தி, காற்புள்ளி போன்ற சஞ்சிகைகள் வழங்கின. மிக முக்கியமாக 2007ஆம் ஆண்டு ஊடறு வெளியீடாக மலையகக் பெண் கவிஞர்களின் படைப்புக்கள் “இசை பிழியப்பட்ட வீணை” எனும் தலைப்பில் பிரசுரித்தமை மலையக பெண் கவிஞர்களை உலகிற்கு வெளிக்காட்டியது எனலாம். இக்கவிதைகளில் பெண்களுடைய பிரச்சினைகள் எவ்வளவு தூரம் அவர்களுடைய குரலாக வெளிக்காட்டப்படுகின்றது என்பதே முக்கியமானதாகும். கவிதைகளில் பெண் குறித்த பால்நிலை வேறுபாடுகள் கீழ்வரும் தலைப்புகளின் கீழ் ஆராயப்படுகின்றது.

## வேலைத்தளமும் பெண்களும்

எமது நாட்டின் பொருளாதாரத்தில் மலையகப் பெண்களின் உழைப்பு முதுகெழும்பைப் போன்றது. உலக பொருளாதாரத்தில் அந்நிய செலவாணியை ஈட்டிக் கொடுக்கும் மலையக பெண்கள் பிய்த்தெடுக்கும் தேயிலைக் கொழுந்துக்கு அதிக கேள்வி நிலவுவது சர்வதேசம் அறிந்த உண்மையாகும். அவ்வாறு வாழும்

> **“ மலையகச் சூழலில் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே பெண் கவிஞர்கள் காணப்படுகின்றனர் என்பதே நிதர்சனம். 1980க்கு பிறகு ஏற்பட்ட உயர்கல்வி வாய்ப்புக்கள், பல்கலைக்கழக பிரவேசம், அவ்விடத்தில் அவர்கள் அதை சரியாக பயன்படுத்திக் கொண்டமை எழுத்துலகத்திற்கு கால்பதிக்க வைத்தது. அந்த வரிசையில் சந்திரலேகா கிங்ஸ்லி, நாகபூசணி, மஞ்சுளா, எஸ்தர் லோகநாதன், சண்முகப்பிரியா, இஸ்மாலிகா, இராகலை தயானி, சர்மிளாதேவி போன்றோரைப் பதிவிடலாம்.**

பெண் தன் வாழ்நாளில் பெரும் பங்கை தேயிலை மலையிலே கழிக்கின்றாள். தோட்டத்தில் காண் வெட்டுதல், உரம் போடுதல், மருந்து தெளித்தல், கன்று நடல் போன்றவற்றோடு ஆணின் உழைப்பு வரையறுக்கப்பட்டு விடுகின்றது. மாறாக பெண்ணின் பாடு ஒவ்வொரு நாளும் 8 மணித்தியாலத்திற்கு மேலாக நீழ்கின்றது. 18 கிலோ எடுத்தால் அன்றைய நாளுக்கான கூலி துண்டில் பதியப்படும் இதற்காக அவள் கடும் பிரயத்தனங்களை கடக்க வேண்டும். இன்று மதுப்போதையில் நுவரெலியா மாவட்டம் 2ஆம் இடத்தில் இருப்பது எவ்வளவு வேதனை அளிக்கின்றதோ அதுப்போல் மதுப்பிரியர்களிடமிருந்து தன் குடும்பத்தையும், பிள்ளைகளின் கல்விக்காக போராடுவதும் மலையகப் பெண்களின் வாழ்நாள் தலைச்சுமையாய் அமைகின்றது. சமையல் வேலை, வீட்டுவேலை, பிள்ளைகளை பராமரிப்பதிலிருந்து தொடர்ச்சியான சுழற்சி வேலையை மலையகப் பெண் செய்துக் கொண்டே இருக்கின்றாள். பிள்ளைப் பேற்றினை தொடர்ந்து 30 நாட்கள் கடந்ததுடன் மலை நோக்கி நகரும் துர்பாக்கிய சூழ்நிலை மலையக பெண்களுக்கு

மட்டுமே உரித்துடையதாக இருப்பது கவலைக்கிடமானது தான். இவ்வாறாகஇ வேலைத்தளத்திலும் வீட்டிலும் ஆண் - பெண் அசமத்துவ நிலை காட்டப்படுவதை பின்வரும் கவிதைகளின் ஊடாக நோக்கலாம்.

**“அவளுக்கென்று எந்த விடியலும்**

**புதியல்ல**

**இந்த வானமும் சொந்தமில்லை**

**……………………………**

**தலையில் மூங்கில் கூடை**

**இடுப்பில் ரெட்டு படங்கு**

**மட்டக்குச்சி**

**மட்டக்கத்தி**

**அவளை விடியல் அலங்கரிக்கிறது**

**அவளின் விடியலில் ஆகத்துயரம்**

**பிள்ளை மடுவத்தில் தேவீயின்**

**குழந்தையை கைவிடுதல் தான்**

**……………………………**

**கனிந்த பழங்களில் பிழித்தல்**

**கனிச்சாறு என்பது போல் கனிந்த வாழ்வை**

**தேசத்தின் முதலுக்காய் பிழிந்துப் கொண்டிருக்கிறாள் - தேவீ**

**மார்பில் கசியும் தாய்ப்பாலும்**

**வியர்வையும் தேவியை நனைக்க**

**வந்துவிட்டாள் அவள் தேயிலை பெரு மலைக்கு………”**

(பெரு வெடிப்பு மலை – தேவி) என்னும் எஸ்தர் லோகநாதனின் வரிகளிலும்,

**“பகல் முழுவதும் பட்டினியால்**

**வாடும் குழந்தைகள்**

**சாப்பாடில்லாவிட்டாலும்**

**சாராயமே வாழ்க்கையாகிவிட்ட**

**கணவன்**

**கூடையைச் சுமந்தே**

**முப்பது வயதிலேயே**

**ஐம்பது வயதுத் தோற்றம்**

**…………………………..**

**மொத்தத்தில் - முட்களே ஆடைகள்**

**சோகமே அவள் சுவாசம்**

**வேதனையே**

**அவள் உலகம்**

**இவள்**

**தேயிலைத் தோட்டத் தொழிலாளிப் பெண் !**

(இசை பிழியப்பட்ட வீணை - தொழிலாளிப் பெண்ணின் சோக கீதம்) அ. பரமேஜஸ்வரியின் வரிகளினூடாகவும் வெளிப்படுகின்றது.

இவ்வாறாக ரத்தத்தையும், சதையையும் தனது நிலத்திற்காகவும் தன் குடும்பத்திற்காகவும் செலவிடும் பெண்களுக்கு கிடைப்பது என்ன? என்பது

> தோட்டத் தொழிலாளியான பெண் தன் வாழ்நாளில் பெரும் பங்கை தேயிலை மலையிலே கழிக்கின்றாள். தோட்டத்தில் காண் வெட்டுதல், உரம் போடுதல், மருந்து தெளித்தல், கன்று நடல் போன்றவற்றோடு ஆணின் உழைப்பு வரையறுக்கப்பட்டு விடுகின்றது. மாறாக பெண்ணின் பாடு ஒவ்வொரு நாளும் 8 மணித்தியாலத்திற்கு மேலாக நீழ்கின்றது. 18 கிலோ எடுத்தால் அன்றைய நாளுக்கான கூலி துண்டில் பதியப்படும் இதற்காக அவள் கடும் பிரயத்தனங்களை கடக்க வேண்டும்.

கேள்விக்குறிகவே உள்ளது. விஞ்ஞானத்தில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் உடல் பலம் குறைந்தவர்கள் எனக் கூறப்பட்டாலும், பெண்களின் உழைப்பு இதை தகர்த்தெறிவதாகவேயுள்ளது. இத்தொடர்ச்சியான வேலை உடல் ரீதியான உபாதைகளை ஏற்படுத்தி அவர்களின் ஆயுளைக் குறைக்கின்றது. இன்னும் கூட தூர மலைப்பகுதிகளில் வேலைக்குச் செல்லும் போது அங்கே சிறுநீர் கழிப்பதற்கு மலசலக்கூட வசதியின்மை மற்றும் குளவிக்கொட்டுதல்இ சிறுத்தை புலிகளின் தாக்குதல் என்பவற்றினால் பெண்கள் வேலைத்தளங்களில் பாதிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்லும் மலையகப் பெண்கள் அங்கு பல கொடுமைகளை அனுபவிக்கின்றனர். தீக்காயங்களுடனும், தலையில் ஆணி அடிக்கப்பட்டும் சில நேரங்களில் பிரேதமாகவும் வரும் சம்பங்களை பத்திரிகை வாயிலாக அறிந்துள்ளோம். சிறு குழந்தைளை கணவனின் பொறுப்பில் விட்டுவிட்டு அந்நியதேசம் செல்லும் பெண்களின் பணத்தை கணவன்மார்கள் சாராயக் கடைகளில் வீண்விரயமாக்கும் நிலையும் மலையக சமூகத்தில் இன்று வரை தொடர்வதே மறுப்பதற்கில்லை. இதன் போக்கு பின்வரும் கவிதையயில் இழையோடுவதைக் காணலாம்.

**“வறுமையே தலையெழுத்தாகிப் போன**

**மலையகத்துக்கு**

**நான் மட்டும் என்ன விதிவிலக்கா?**

**திரவியம் தேட**

**போகத் தயாரானேன் மத்திய கிழக்குக்கு**

**கொழும்பின் நிறமே தெரியாத எனக்கு**

**அரபு நாடுகளின் நிறம் எவ்வாறு**

**தெரியப்போகின்றது………”**

(இசை பிழியப்பட்ட வீணை – சவால்) மஞ்சுளாவின கவி வரிகள்,

இவ்வாறு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கஸ்டப்படும் மலையகப் பெண்களின் நிலை பரிதாபத்திற்குரியதாகவே உள்ளது.

## பெண்ணும் காமமும்

பெண் வரலாற்று காலம் தொடக்கம் இன்று வரை குறிப்பிட்ட சதை விரும்பிகளால் காமப் பொருளாக பார்க்கப்படுகின்றமை அறியலாம். பெண் உடல் வேட்கை பாலியல் சேட்டையாகவும், துஷ்பிரயோகமாகவும் வெளிப்படுகின்றது. பிரயாணத்தின் போது அவள் படும் அவஸ்தைகளை பின்வரும் கவிதை கூறுகின்றது.

**“சில அழுக்கு கண்கள்**

**அந்தரங்கத்தில் மேயும் போது**

**ஆடையுடுத்தியும் அம்பணமாவோம்**

**அந்தவொரு தருணத்தில்**

**உயிர் போகும் உடல் வேகும்**

**வண்டி நெருக்கமானால்**

**வந்து நெருக்கமாகி – நொறுக்கி விடுவார்கள்**

………………………………………”

காம இச்சைக்காக காதலிக்கும் ஆண்களின் நிலைப்பாட்டினை,

**“ பாவம் அவள் பருவமடையா முன்**

**படுக்கை வெறியர்களுக்கு இசையானவள்**

**தொட்டில் தாண்டி பத்தாண்டில்**

**கட்டிலில் கற்பை இழந்தவள்**

…………………………………….

**காம கபடியில் உடலிழந்த இவளின்**

**கற்பைத் தேடி அழைகிறாயா?**

**காதல் கொண்டவன் நீ**

**காமம் தேடியவன் நீ**

**கன்னி பரிசோதனை செய்து**

**கழட்டிவிட்டவன் நீ**

**ஐந்து நிமிட இன்பத்தில்**

**அவள் இதயத்தை – அரிந்து விட்டாய்**

**மோகத்தால் - மோகமொன்றே காதலானால்**

**இதயத்தை ஏன் கேட்டாய்?**

(அக்கினியாய் வெளியே வா - இராகலை தயானி) என்ற கவிதைகயின் வாயிலாக காமத்திற்காக காதல் செய்யும் காளையர்களை கடுமையாக சாடுகின்றார். காதல் என்ற போர்வையில் பெண்கள் காலம்

காலமாக ஏமாற்றடைந்த வண்ணமே இருக்கின்றனர். இதனால் கல்வியை கைவிட்டு சிறு வயதிலேயே திருமண பந்தத்திற்குள் தள்ளப்படுகின்றனர். அத்துடன் "அப்பாவின் கணவர்" எனும் தலைப்பில் ம.கலையரசி எழுதிய கவிதையில், அம்மா இரண்டாம் திருமணம் செய்து கொள்கின்றார். அவர் மனைவியின் பிள்ளைகளை வேற்றார் பிள்ளைகளை; போல் நினைத்து காம பார்வையில் பிள்ளைகளை அணுகும் கேவலமான வக்கிர எண்ணங்களை பின்வருமாறு கூறுகின்றார்.

**"விடுமுறை இல்லா பசி**

**அவனுக்கு என்மீது**

**கிழிந்த சேலை**

**தெரியாத – அவனுக்கு**

**கிழிசலின் வழி**

**தெரியும்**

**சதைப்பிண்டம்………………**

**என் கதறிய நாவும்**

**சிதறிய வார்த்தைகளும்**

**கலங்கிய கண்களும்**

**நொருங்கிய இதயமும்**

**எப்போதும் அவன்**

**காமப்பிடியிலேயே**

**ஜீவிக்கிறது…..**

**அவனது பார்வை**

**என் தங்கை மீது**

**படர்ந்து விடக்கூடாது**

**என்ற அச்சத்தில்..**

இவ்வாறாக, பெண்கள் காமுகர்களின் பிடியில் சிக்கி தவிக்கும் நிலையை காணலாம். பொதுவானதொரு எண்ணப்பாடு காமம் தொடர்பாக பெண் பேசக்கூடாது என்ற மனநிலை உண்டு. ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் காமம் தொடர்பாகவும், தவறான காம பார்வையிருந்து தன்னை எப்படி பாதுகாத்துக் கொள்வதென்ற விடயத்தில் பெண்கள் தெளிவாக இருப்பது அவசியமானதாகும். இன்று ஒவ்வொரு பெற்றோரும் தன் பி;ள்ளைகளுக்கும் நல்லத் தொடுகை பற்றியும் தீய தொடுகை பற்றியும் சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

## பெண்ணின் பார்வையில் அரசியல்

காலங் காலமாக தேர்தல் காலங்களில் மட்டும் வெளிநடப்புச் செய்யும் அரசியல் வாதிகளின் கபடத் தனங்களை சொல்லும் கவிதைக்ளும் மலையகப் பெண்கள் பாடியுள்ளனர். "அரசியல் பழகு" என்பது கட்டாயமாக எல்லாப் பெண்களுக்கும் கட்டாயமாக்க வேண்டிய சித்தாந்தமாக உள்ளது. ஆண்கள் மட்டுமே பேசிய அரசியல் விடயங்களை பெண்களும் பேசக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பது சமத்துவத்தினை பிரதிபலிக்கின்றது.

**"தகரத்துளைகளில்**

**வெயில் காலங்களில்**

**எட்டிப் பார்க்கிறான் - சூரியன்**

**மழைங்காலங்களில் அழையாத விருந்தாளியாய்**

**உள் நுழையும் வர்ணனின் கொடை**

**வெற்றிலை எச்சில்**

**சிறுநீர் சிலசமயம் மலத்தோடு**

**மந்தக்கதியில் ஓடும் வடிகால்**

**இன்னல் வரம் பெற்றதால் தானோ**

**எந்த அண்ணலுக்கும்**

**இன்னும் எங்கள் இருப்பிட இம்சை புரியவில்லை….**

(அக்கினியாய் வெளியே வா - இராகலை தயானி) என்று உரத்து கூறுகிறார். இன்றும் கூட வாழ்விடங்களில் மாற்றம் ஏதும் இல்லாமல் வாழும் எம் மக்களின் நிலை கவலைக்கிடமானதாகும்.

**"எங்கள் எம்.பீ. மிகவும்**

**நல்லவர்**

**………………………**

**மக்களின் துன்பங்களைக் கண்டு**

**துவழமாட்டார்**

**வேதனைகளில் வெகுண்டெழவும் மாட்டார்**

**தனது பாதையில் எதையும்**

**அலட்சியமின்றி அவமானங்களையும்**

> ஆண் அடிமைத்துவ சமூகத்தில் பெண்களின் நிலை வரண்ட தன்மையோடு இருக்க பார்க்காமல், பெண் சுதந்திரத்திற்கும், அவர்களின் இருப்பிற்கு ஆண் தலைமைகளும் கைகோர்ப்பதால் மட்டுமே சமூக மாற்றத்தை கொண்டு வர இயலும். அது படைப்புலகிலும் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக மலையக இலக்கியத்தளத்தில் ஆண் கவிஞர்கள் காமம், அரசியல் குறித்து பேசும் போது ஏற்றுக்கொள்ளும் வாசகர் வட்டங்கள், ஒரு பெண் படைப்பாளி இவற்றை பாடும் போது ஏளனப் பார்வையில் பார்க்கும் நிலை மாற்றப்பட வேண்டும். தன் உடல் சார்ந்த விடயங்கள் மற்றும் உணர்ச்சிகளை வெளியில் பகிர படைப்புக்களில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

**ஆத்திரமின்றி**

**ஏற்றுக்கொள்ளும் புதுமைப்பிறவி**

**எங்கள் எம்.பி மிகவும் நல்லவர்"**

எனப் பரிகசிக்கும் ரா.கெத்தரீன் எங்கள் எம். பீ எனும் தலைப்பில் இசைபிழியப்பட்ட வீணை தொகுப்பில் கூறுகிறார்.

**"லயங்களின் தகரக் கூரைகளுடன்**

**இப்பவோ அப்பவோ நொறுங்கி விழக்கூடும்**

**வெள்ளை மண் பூசிய செவிரோடும்**

**அவன் குழந்தைகளும் சிறுத்தைகளும்**

**குளவிகளும் 1000 ரூபாக் கூலிக் கனவுகளோடும் நூற்றாண்டுகள்**

**அரசியல்வாதிகளின் அப்பழுக்கற்ற வாக்குறுதிகளோடும்**

**பத்திரமாயிருக்கிறாள் பெறுமதியற்ற**

**தோட்டத் தொழிலாளி..."**

1000 ரூபாய் பொய்யுரைகளையும் அதனை இன்னும் நம்பிக்கொண்டு வாழும் தோட்டத் தொழிலாளிகளின் எதிர்பார்ப்பின் ஏமாற்றங்களையும் பெரு வெடிப்பு மலையிலிருந்து எஸ்தர் லோகநாதன் உரத்து அரசியல் பேசுகின்றார்.

## பெண் தேடும் சுதந்திரமும், இருப்பும்

மலையகத்தில் கல்வி ஏற்படுத்திய தாக்கம் பெரிது. பெண்கள் கல்வி கற்கத் தொடங்கிய காலத்திலிருந்தே அவர்களுக்கான சுதந்திரத்தையும், இருப்பையும் பற்றி சிந்திக்கத் தொடங்கினர். அது அவர்களின் வாயிலாகவும் வெளிப்படுகின்றது.

**"இத்தனை சிறகுகளில் உன்**

**சிறகின் வகையுணர்ந்து**

**உன்னத நிலையுடைய**

**உறுதியாய் நிமிர்ந்து விடு**

**உதறும் உன் சிரிப்பில்**

**உடையட்டும் கட்டுக்கள்**

**இன்னும் ஏன் தலைகவிழ்ப்பு**

**...........................**

**உன் சிறகுகளை**

**நீயே சிதைத்துக் கொண்டு**

**மரபுக் கூட்டுக்குள் அடைப்பட்ட காலம்**

**மலையேறிப் போச்சு**

**வெளியே வா"**

………………………………..

**“எத்தனை பெண்கள் எம்மில் இன்று**

**எம்மையை ஆளுகிறார் - உயர்பதவியை**

**நாடியுள்ளார்**

**சற்றே சிந்தனைக் குதிரையைத்**

**தட்டிடுங்கள்**

**நினைத்திட்டால் பெண்கள்**

**முடித்திடல் இலகு.**

**இன்றே முடிவெடுங்கள் அதற்காய் !**

இவ்வாறாக பெண்ணின் சுதந்திர இருப்பு வெளிச்சமிட்டு காட்டப்படுகின்றது. பாரதி காண துடிக்கும் புதுமைப் பெண்ணாய் தானும் மாற வேண்டும் என்ற அவா அவர்களின் படைப்புக்களில் காட்டப்படுகின்றது.

## முடிவுரை

மலையகத்தில் உருவாகிய பெண் கவிஞர்கள் தான் ஓடியாடி திரிந்த சமூகத்தின் நிலை பற்றியும், தான் வாழும் சமூகத்தை எப்படி தனக்கேற்றவாறு மாற்றி அமைத்துக் கொள்ளலாம் என பலவாறாக யோசித்து தங்கள் கவிதைகளை படைத்துள்ளார்கள். ஒரு வரையறைக்குள் அடக்கி வைக்கப்பட்ட பெண்களை, அவர்களுக்கு கிடைத்த கல்வியே சிந்திக்க தூண்டியது எனலாம். சமூக அடுக்கமைவில் பிள்ளை பேற்றிலிருந்து ஆண் - பெண் வேறுப்பாட்டுக்கான அடித்தளம் இடப்படுகின்றது. ஆண் பிள்ளை என்றால் ஆசையுடன் சிரிக்கும் முகம் முதல் பிள்ளை பெண்ணாக பிறந்திட்டால் முகம் சுழிக்கும் நிலை காணப்படுகின்றது. குடும்ப ரீதியாக தோன்றும் ஆண்- பெண் முரண்நிலையின் ஆரம்பமே பின்னர் காதலை மறுத்தலிக்கும் போது அசீட் வீசுவதையும், சீதனக் கேட்பதும், பெண்களின் உடலை சுவீகரிக்க நினைப்பதும் என தொடர்கிறது. பெண் கவிஞர்களின் படைப்புகளில் வெளிப்படும் ஆண் அடக்குமுறை கவிதைகளைக் கொண்டு முழு ஆண் சமூகத்தையும் அவர்கள் தவறாக வெளிக்காட்டவில்லை. மாறாக சமூகத்தில் பலரோடு சிலராக உலாவும் இவர்களை அடையாளப்படுத்தும் போது அவர்களிடம் தன் மனைவி, மக்கள் நேரடியாகக் கூற முடியாததை மறைமுகமாக கூற முற்படும் போது அங்கே ஏதோவொரு மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையிலேயே இவர்களின் கவிதை உலாவருகின்றது.

ஆண் அடிமைத்துவ சமூகத்தில் பெண்களின் நிலை வரண்ட தன்மையோடு இருக்க பார்க்காமல், பெண் சுதந்திரத்திற்கும், அவர்களின் இருப்பிற்கு ஆண் தலைமைகளும் கைகோர்ப்பதால் மட்டுமே சமூக மாற்றத்தை கொண்டு வர இயலும். அது படைப்புலகிலும் முன்னிலைப்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக மலையக இலக்கியத்தளத்தில் ஆண் கவிஞர்கள் காமம், அரசியல் குறித்து பேசும் போது ஏற்றுக்கொள்ளும் வாசகர் வட்டங்கள், ஒரு பெண் படைப்பாளி இவற்றை பாடும் போது ஏளனப் பார்வையில் பார்க்கும் நிலை மாற்றப்பட வேண்டும். தன் உடல் சார்ந்த விடயங்கள் மற்றும் உணர்ச்சிகளை வெளியில் பகிர படைப்புக்களில் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். காரசாரமான விமர்சனங்களை அள்ளிக்கொண்டுப் போய் வீசாமல் அவர்களை தொடர்ந்து எழுத தூண்டச் செய்தால் மலையகத்தில் இன்னும் பல பெண் கவிஞர்களை உருவாக்க இயலும். படைப்புக்களிலும் பெண் பற்றிய புரிதல்களையும், சக்திகளையும் புரிந்துக் கொண்டும், பால்நிலை வேறுபாடுகள் களைக்கப்படும் போது மலையகத்தில் இன்னும் காத்திரமான பெண் படைப்பாளிகள் உருவாவது திண்ணம்.

## துணைநூற்பட்டியல்


1. எஸ்தர் , லோ. (2022). பெரு வெடிப்பு மலைகள். சென்னை: பூபாளம் புத்தகப் பண்ணை.

2. இராகலை தயானி. (2016). அக்கினியாய் வெளியே வா, கொழும்பு: புரவலர் புத்தக பூங்கா.

3. இசை பிழியப்பட்ட வீணை, (2007) இலங்கை: ஊடறு வெளியீடு

4. கமலினி, க. (1999). மலையக மக்களுடைய இனத்துவ இருப்பில் பால்நிலை. கொழும்பு: பெண்கள் கல்வி, ஆய்வு நிறுவனம்.

5. கலையரசி, ம. (2015). கலாபம், அட்டன்: காயத்திரி பதிப்பகம்.

6. திலகவதி, எஸ். (2019). நான்காம் சுவரில் தொங்கும் படம். கொழும்பு: கொடகே வெளியீடு.

# மலையகத் தமிழ் சமூகம்

## 200 வருட வரலாறு, கலாச்சாரம் மற்றும் போராட்டம்



## தேசிய மக்கள் சக்தியின் ஹற்றன் பிரகடனம்

### முன்னுரை:

தேசிய மக்கள் சக்தி; (NPP) என்ற அரசியல் இயக்கத்;தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், இளைஞர் குழுக்கள், மகளிர் குழுக்கள், தொழிற்சங்கங்கள்; மற்றும் மலையகத் தமிழ் சமூகத்தைச்சார்ந்த சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளான நாங்கள் மலையகத் தமிழ் சமூகம் சம்பந்தமான தேசிய மாநாட்டிற்காக, இலங்கையின் ஹற்றன் நகரில் 2023; ஒக்டோபர் 15 ஆம் திகதி ஒன்று கூடினோம்.

மலையகத் தமிழ் சமூகம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு, இந்த ஆண்டுடன் கிட்டத்தட்ட 200 வருடங்கள் நிறைவடைகின்றன. கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், பெருந்தோட்ட மற்றும் தேசிய பொருளாதாரத்தில் அவர்களின் பாரிய பங்களிப்பு எமது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பலமூட்டியது. இலங்கையில் மிகவும் கடினமாக உழைக்கும் மற்றும் அதிகமாக உற்பத்திசெய்யும் தொழிலாளர்களில் இம்மக்கள் முக்கிய இடத்தை வகிக்கிறார்கள். மேலும், அவர்களின் உழைப்பு நாட்டின் பொருளாதாரத்தில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், தேசிய அபிவிருத்திக்கு மகத்தான பங்களிப்பைச் செய்கிறது.

1820 களில், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின்போது, தோட்டங்களிலும்; உட்கட்டமைப்பு வசதிக்ளை நிர்மாணிக்கவும் இம்மக்கள்; முதலில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு பகுதியளவிலான அடிமைத் தொழிலாளர்களாகவே கொண்டுவரப்பட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் கோப்பிச் செய்கையும் அதன் பின்னர் தேயிலை மற்றும் இரப்பர் செய்கையும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பெருந்தோட்டங்கள் 1970 களில் தேசியமயமாக்கப்பட்டமை மற்றும் 1992 களில் தோட்ட முகாமைத்துவம் தனியார்மயமாக்கப்பட்டமையை உள்ளிட்ட பலமாற்றங்களுக்கு பெருந்தோட்டத்துறை உள்ளாகி வந்துள்ளது. அத்துடன் 1920 களில் இருந்து பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சியும்; விரிவாக்கமும் தாக்கமேற்படுத்தியுள்ளது.

இலங்கையில் தோட்டங்களுக்குள்ளேயும் வெளியேயும் கிட்டத்தட்ட ஒரு மில்லியனுக்கு அதிகமான

மலையகத் தமிழர்கள் வாழ்கின்றனர். எவ்வாறாயினும், இலங்கையின் பெருந்தோட்டப் பிரதேசங்களை அபிவிருத்திசெய்வதற்கும் பராமரிப்பதற்கும் மாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த தம்மை அர்ப்பணித்த இந்த மக்கள் பல ஆண்டுகளாக பலவகையான துன்பங்களுக்கும் இனரீதியான பாரபட்சம் காட்டப்படுதலுக்கும் மனிதஉரிமை மீறல்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்;. அவர்களின் அரசியல், சமூக-பொருளாதார, கலாச்சார உரிமைகள் மற்றும் அவர்களின் அபிவிருத்திக்கான உரிமைகள் மீறப்பட்டு, அவர்கள் நாட்டின் மிகவும் வறுமையான மக்களாக ஆக்கப்பட்டுள்ளனர். 1948 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அவர்களின் குடியுரிமையை நீக்கியதன் மூலமும் அதன்பின் ஆட்சிக்கு வந்த பல்வேறு அரசாங்கங்களின் பாரபட்சம் காட்டுகின்ற கொள்கைகளும் இந்த நிலைமையை மேலும் தீவிரப்படுத்தியதோடு, அதன் விளைவாக இந்த மக்களில் பெரும்பாலானோருக்கு 35 வருடங்களுக்கு மேலாக பிரஜாவுரிமையின்றி இந்த நாட்டில் வாழவேண்டிய நிலையேற்பட்டது.

அவர்கள் இப்போது இலங்கையின் பிரஜைகளாக இருந்தாலும், அவர்களுக்கு உரித்தான ஒருசில சேவைகளைப் பெறுவதில் இன்னும் சிரமம் காணப்படுகின்றது. மலையகத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் போதியளவிலான பிரயத்தனங்களையும் உண்மையான முயற்சிகளையும் மேற்கொள்ளவில்லையென தேசிய மக்கள் சக்தி நம்புகிறது. நிகழ்கால அரசாங்கம் புதிதாக அறிமுகப்படுத்தியுள்ள தொழில்; சட்டத்தின் ஊடாக தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைக்கூட பறிக்க நிகழ்கால அரசாங்கத்தின் ஊடாக ஒருசில பெருந்தோட்டக் கம்பெனிகள் முயற்சிசெய்து வருகின்றன. அரசாங்கத்தில் பொறுப்புகளை வகிக்கின்ற ஒரு சில பெருந்தோட்டுத்துறைத் தலைவர்களும் மரபுரீதியான தோட்டத் தொழிலாளர் இயக்கங்களும் அரசியல் கட்சிகளும் அதனைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவது தென்படவில்லை. நிகழ்கால அரசாங்கத்தின் உத்தேச தொழிற்சட்டத்தில் உள்ளடக்கியுள்ள திருத்தங்கள் மூலமாக 1930 களில் கைத்தொழில்; மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்த மலையகத் தமிழ்ப் பிரதிநிதிகளிலொருவரான பெரியசுந்தரம் அவர்களின் பதவிக்காலத்தில் அறிமுகப்படுத்திய தொழிற் சங்க கட்டளைச் சட்டம், தொழிலாளர் இழப்பீட்டு;க் கட்டளைச்; சட்டம் மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் போன்ற சட்டங்களால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தொழிலாளர் உரிமைகள் பல நீக்கப்பட்டுள்ளன.

இலங்கை அரசாங்கம் இந்த சமுதாயத்தின் கௌரவமான பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துகின்ற கொள்கைச் சட்டகத்தை, செயற்பாட்டு வேலைத்திட்டத்தை மற்றும் பொறியமைப்பினை ஆரம்பிக்கவேண்டுமென தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் நாங்கள் நம்புகிறோம்.

இந்த பின்னணியைக் கவனத்தில் கொண்டு நாங்கள் இவ்வாறு பிரகடனம் செய்கிறோம்:

### அடையாளம்:

இம்மக்கள் பொதுவாக தங்களை மலையகத் தமிழர் என்று அழைக்கின்றனர். "மலையகத் தமிழர்" என்று அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்ற மக்களின் அக்கறையை தேசியமக்கள் சக்தியும் மதிப்பளித்து அங்கீகரிக்கிறது.

### காணி மற்றும் வீடமைப்பு:

பெருந்தோட்டங்;களில் வசிக்கும் மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று வீடமைப்பு ஆகும். 2012/2013 தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள அறிக்கையின்படி அவர்களில் 67.8மூ வீதமானவர்கள் இன்னமும் 'லயன் அறைகளில்' வாழ்கிறார்கள். மேலும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி மலையகத் தமிழ் மக்கள் சுபிட்சமான சமுதாயமென்றவகையில் அவர்களின் அபிவிருத்திக்கு உதவுகின்ற வீடமைப்புத் திட்டமொன்று மூலமாக அவர்களுக்கு உயிர்வாழ்வதற்கான பொருத்தமான வீடுகளை வழங்குகின்ற வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கும். சில தோட்டங்களில் தொழிலாளர்கள் ஓய்வுபெறும்போது அவர்களை வீடுகளில் இருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி அத்தகைய நடவடிக்கைகளைத் தடுக்கும். பெரும்பாலான தோட்டக் குடும்பங்கள் பணத்தையும் உழைப்பையும் செலவிட்டு தமது வீடுகளை அமைத்திருந்தபோதிலும் காணிகளைப் பதிவுசெய்கின்ற அங்கீகரிக்கப்பட்;ட உறுதிகள் இன்னமும் கிடையாது. உறுதிகள் இல்லாத பிரச்சினை இந்த சமுதாயத்திற்கு மாத்திரமன்றி நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேரந்த குடியிருப்புவாசிகளும் எதிர்நோக்குகின்ற பிரச்சினையாக அமைவதோடு இந்த சிக்கலுக்கு நியாயமான தீர்வினைக் கண்டறிகின்ற அத்துடன் மலையகத் தமிழ் மக்களுக்கு அவர்களின் வீடுகளில் தடைகளின்றி தொடர்ச்சயாக வசிப்பதற்கான உரிமையை தேசிய மக்கள் சக்தி உறுதி செய்கின்றது.

பெருந்தோட்டப் பிரதேசங்களில் பயிர்செய்யப்படாத பிரதேசங்கள் மற்றும் கைவிடப்பட்ட காணிகளை மலையகத் தமிழ் சமுதாயத்தின் தொழிலற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஈடுபடுத்தும்.

## பொதுச் சேவைகளுக்கான அணுகல்:

2021 தரவுகளின்படி நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ மற்றும் நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுகள் முறையே 225,483 மற்றும் 232,466 மக்கள் தொகையை கொண்டுள்ளன. குறிப்பாக மலையக சமூகத்தினருக்கு அரச சேவைகளை அணுகுவதில் இது பாரிய தடையாக அமைந்துள்ளது. மலையகத் தமிழ் மக்கள் கிராம அலுவலகர்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற அரச நிறுவனங்களுக்கான அணுகல் இல்லாமையே பொதுச் சேவைகளைப் பெறுவதில் அவர்கள் எதிர்கொள்ளும் முறைமைசார்ந்த பாரபட்சத்திற்கான காரணமென தேசிய மக்கள் சக்தி கருதுவதோடு இது அவ்வாறு அமையக்கூடாதென நாங்கள் திடமாக நம்புகிறோம். நியாயமான எல்லை நிர்ணயம் மற்றும் தேசிய தரநியமங்களை அடிப்படையாகக் கொண்டதாக பெருந்தோட்டப் பிரதேசங்களில் கிராம அலுவலர்கள் (புN) மற்றும் பிரதேச செயலகங்;களின் (னுளு) விரிவாக்கம், நியாயமான எல்லைநிர்ணயம் மற்றும் தேசிய தரநியமங்களின் அடிப்படையில் பெருந்தோட்டப் பகுதிகளில் கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகங்களின் சேவைகளை விரிவாக்கவேண்டியதும் பிரதேச சபைகளை நிறுவவேண்டியதும் அவசியமாகும். இந்த அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களும்; சேவையாற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் இருமொழி பேசுபவர்களாகவும் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மக்களுடன் உரையாடக்கூடிய திறமையுள்ளவர்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி செயற்;படும். அவர்களுக்கு சேவைசெய்ய கிராம அலுவலர்கள் (புN) அமைப்பை விரிவுபடுத்த முடியாவிட்டால் மலையத் தமிழ் சமுதாயத்தின் அனைத்துப் பிரஜைகளுக்கும் தேசிய அடையாள அட்டை போன்ற அடிப்படை ஆவணங்கள் உள்ளிட்ட அவர்களுக்கு உரிமையுள்ள அனைத்து அரச சேவைகளையும் வழங்கக்கூடிய இணையான சேவையை நிறுவ தேசிய மக்கள் சக்தி என்ற வகையில் நாங்கள் செயலாற்றுவோம். மலையக தமிழ் சமூகத்திற்கு அரச சேவைகளுக்கான மிகச்சிறந்த அணுகலை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியத்திற்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## கல்வி:

மலையக தமிழ் சமூகம் அதிகமாக வசிக்கின்ற பிரதேசங்களில் வதிவிட வசதிகளைக்கொண்ட உயர்தர விஞ்ஞானம் மற்றும் கணிதம் கற்பிக்கக்கூடிய 1யுடீ பாடசாலைகளும் தேசியபாடசாலைகள், தொழில்நுட்பக் கல்லூரிகள,; கல்வியியற் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. குறிப்பாக கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் தகைமைபெற்ற ஆசிரியர்களுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது. மலையகத் தமிழ் பிள்ளைகளுக்கு கல்வித் துறையில் ஆக்கமுறையான மாற்றத்தையும் சமவாய்ப்பையும் தேசிய மக்கள் சக்தி உறுதிப்படுத்தும்.

## சுகாதாரம்:

பெருந்தோட்ட சுகாதார சேவைகள் தேசிய சுகாதார அமைப்பிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இது பல பிரச்சினைகளை உருவாக்கி உள்ளதுடன்;, நாட்டின் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களுடன் சார்புரீதியாக மலையத் தமிழ் மக்களுக்கு சுகாதார நன்மைகள் அற்றுப்போகச் செய்விக்கப்பட்டுள்ளன. தற்போது ஒருசில தோட்டங்களில் மருந்தகங்கள் மூடப்பட்டுள்ளதோடு ஒருசில தோட்டங்களில் மருந்தகங்கள் இருந்தபோதிலும் அவற்றின் நிலைமை கவலைக்கிடமானது. மலையகத் தமிழ் மக்களின் சுகாதாரக் கட்டமைப்பினை தேசிய சுகாதாரக் கட்டமைப்புடன் முழுமையாக இணைத்து இணையான சுகாதார வசதிகள் வழங்கப்படும்.

## வருமானம் மற்றும் ஊதியம்:

தோட்டங்களை நிர்வகிப்பதற்கான தற்போதைய முறைமையானது மிகவும் தோல்வியடைந்துள்ளது. அரச துறையைவிட தனியாரால் தோட்டங்களை சிறப்பாக நிர்வகிக்கமுடியும் என்ற தவறான எண்ணத்தில் தோட்டங்கள் 22 கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக கம்பனிகளின் ஒரே முகாமைத்துவ மூலோபாயம் தொழிலாளர்கள் அனுபவிக்கும் எந்தவொரு நிதி மற்றும் பிற உரிமைகளைப் பறிப்பதன் மூலம் அவர்களின் இலாபத்தைப் பெருக்குவதாகத் தோன்றுகிறது. தனியார் கம்பனிகளின் நிர்வாகத்தின்கீழ் மாத்திரமன்றி தற்போது அரசாங்கத்தின் உரிமையின் கீழுள்ள தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு நாளாந்தச் சம்பளம் பெறுகின்ற ஏனைய தொழிலார்களுடன் ஒப்பிடுகையில் குறைவான சம்பளமே செலுத்தப்படுகின்றது. இந்த நிலைமை அவர்களை

வறுமைக்குள் தள்ளுகிறது எனலாம். கம்பனிகளால் தொழிலாளர்களுக்கு எதிரான பல்வேறு செயல்கள் புரியப்படுகின்றன. அவற்றில் சுயாதீனமான அமயநிலை ஊழியர் மன்றத்தை தாபிக்கின்ற நடவடிக்கையான வெளிவாரி பயிர்ச்செய்கை முறைமையை (ழுரவபசழற ளுலளவநஅ) விரிவுபடுத்துதல், தான்தோன்றித்தனமான சேவை இலக்குகள் மற்றும் நியமங்களை விதித்தல் மற்றும் சேவை இலக்கினை அடையாதவர்களுக்கு அரைச்சம்பளம் வழங்குதல் என்பவை அடங்குகின்றன. புதிய தொழிலாளர்களை பதிவுசெய்ய மறுப்பது மற்றும் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தமுடியாது எனக்கூறி அவர்களை பிழைப்பூதிய மட்ட சம்பளத்தில் வைத்திருப்பதும் பாரிய சிக்கலாகும். தேசிய மக்கள் சக்தியானது கம்பனிகளின் அரைச்சம்பள மோசடியைத் தடுப்பதோடு இலாபம் மறைக்கப்படுகின்றதா அல்லது குழுமத் தொழில்முயற்சிகளுக்கோ இணைக் கம்பனிகளுக்கோ மாற்றப்படுகிறதா என்பதையும் கண்காணிக்கும். அதைப்போலவே நட்டமடைவதாகக் கூறுகின்ற கம்பெனிகள் அரசாங்க கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும். உண்மையாகவே நட்டமடையுமாயின் நடப்புக் கம்பெனிகளுக்கு குத்தகைக்கு விடுப்படுதலை மீள்பரிசீலனைசெய்து ஊழியர்களுக்கு சாதகமான தொழிச் சூழலையும் போதியளவிலான சம்பளத்தையும் வழங்கத் தயாராகவுள்ள கம்பெனிகளிடம் தோட்டங்கள் கையளிக்கப்படும். தற்போதுள்ள அரசாங்கத் தோட்டங்களில் சேவைபுரிவோருக்கும் போதியளவிலான சம்பளம் உறுதிப்படுத்தப்படும்.

### வறுமை:

நாட்டிலேயே மிகவும் ஏழ்மையில் உள்ளவர்களாக பெருந்தோட்டங்களில் வாழும் மக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கிராமப்புற மக்களுக்கான 1.9 சதவீதத்துடன் ஒப்பிடும்போது இந்த மக்களின் வறுமைநிலை 8.8 சதவீதமாக காணப்படுகின்றது (ர்ர்ஐநுளுஇ2017). இந்த சிக்கலைச் தீர்த்துவைக்க முனைப்பானதும் பனறுதிமிக்கதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டப்படுதல்: -

பெண் தொழிலாளர்கள் இத்துறையின் முதுகெலும்பாக காணப்படுகின்றனர். பெண் தொழில் படையினரே பெருந்தோட்டப் பகுதிகளில் அதிகமாக உள்ளனர். (நுவரெலியா சுமார் 52 சதவீதம்). தேசிய மக்கள் சக்தி பெண்களின் உரிமைகள், சமத்துவம் மற்றும் பெருந்தோட்டங்களில் வாழும்; முறைசார்ந்த மற்றும் முறைசாராவேலைகளில் ஈடுபடும் பெண்களின் கௌரவத்தை உறுதிசெய்யும். பெருந்தோட்டத்துறையில் பெண்களுக்கு உரிய இடம் தற்போது வழங்கப்படவில்லை. தோட்டங்களில் மேற்பார்வையாளர் அல்லது கள உத்தியோகத்தர் அந்தஸ்தை அடைவதில் மட்டுமின்றி தொழிற்சங்கங்களில் தலைமைப் பதவிகளையும் அடைவதில் பெண்கள் தடைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த நிலைமையின்கீழ் பெருந்தோட்டத்துறையில் ஆண்- பெண் சமூகநிலை மாற்றங்கள் மலையகத் தமிழ் பெண்களின் சுரண்டல் மற்றும் பாரபட்சம் காட்டுதலை மேலோங்கச் செய்வித்துக் காட்டுகின்றது. மிகச்சிறந்த உற்பத்தித்திறன் ஏற்;படவும் மேம்பட்ட தொழில் கொள்வோர் - பணியாளர் உறவுகளுக்கான முகாமைத்துவத் தீர்மானம் எடுத்தலில்; தொழிலாளர்களை ஈடுபடுத்தும் திட்டங்களை செயல்படுத்தவேண்டுமென தேசிய மக்கள் சக்தி நம்புகிறது. இந்த திட்டங்கள் மூலமாக மலையகத் தமிழ் பெண்களுக்கு மலையக சமூகத்தில் கணிசமான வகிபாகம் கிடைப்பதோடு அதன்மூலமாக அவர்களுக்கு சமத்துவம் உரித்தாகும்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பரந்துவாழும் மலையகத் தமிழ் மக்களின் கலாச்சார, சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளை நாம் அடையாளம் கண்டுள்ளதோடு அவற்றுக்கான நியாயமான தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம்.

இந்த பிரகடனத்தை ஏற்றுக்கொள்கின்ற தேசிய மக்கள் சக்தியாகிய நாங்கள், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மலையகத் தமிழ் மக்களை வறுமையிலிருந்தும் பின்னடைவுநிலையிலிருந்தும் மீட்டெடுக்கின்ற அதேவேளையில் மிகச்சிறந்த வாழ்க்கைத் தரத்தை அவர்களுக்கு உறுதிசெய்கிறோம். மலையகத் தமிழ் மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களை கௌரவமான இலங்கைப் பிரஜைகளாக உயர்த்திவைப்போம் என்;பதை இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

2023 ஒக்டோபர் 15 ஆந் திகதி.


# மலையகம் 200

ஏற்றுமதிக்காய் ஏமாற்றப்பட்ட சமூகம்
மலையகம் 200
இடது கை வணக்கம் போடும் சமூகம்
மலையகம் 200
இன்றும் வெள்ளையரின் லயக்குடியிருப்பில்
மலையகம் 200
கக்கூஸ் முதல் கல்லறை வரை
தோட்டத்துரையின் கையெழுத்திற்கு
காத்திருக்கும்
மலையகம் 200
சிறுதோட்ட முதலாளிகளின்
அடிமைத்தனத்திள்
உச்சியில் மலையகம் 200
நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெழும்பாய்
உழைக்கும் மலையகம் 200
முதுகெலும்புத் தேய உழைக்கும் எம்மவர்களை
போற்ற ஒரு இரங்கல் மொழி இல்லா
மலையகம் 200
பெற்றோரின் புதைக்குழிக்கு மேலே ஏறி நின்று
மாடாய் உழைக்கும் மலையகம் 200
பாதுகாப்பே இல்லா மலையகம் 200
EPF, ETF காணாமல் போகும் மலையகம் 200
கர்ப்பிணிகால கொடுப்பனவை
இல்லாதொழித்த
மலையகம் 200
கருத்துச் சுதந்திரம் இருந்தும் பேசமுடியாது
வாய்மூடி வேடிக்கை பார்க்கும் மலையகம் 200
ஏமாற்றிப் பிழைக்கும் அரசியல்வாதிகளுக்கு
கைதட்டி மாலை போடும் மலையகம் 200
உறுதியான சம்பள உயர்வின்றி ஏங்கித்
தவிக்கும்
மலையகம் 200

தேர்தல் காலத்தில் பொய் பிரசாரத்திற்கும்
தகரம் நாலுக்கும் ஒரு போத்தல்
சாராயத்துக்கும்
விலைபோகும் மலையகம் 200
மதுவில் மாதுவை தேடிச் சென்று
குடும்பத்தையே சீரழிக்கும் மலையகம் 200
சரித்திரம் படைத்த சாதனையாளர்களை
கொண்ட
மலையகம் 200
எமக்காக போராடி உயிர்நீத்த
தியாகிகளை நினைவுகூரா மலையகம் 200
இன்றைய நூற்றாண்டு பாடப்புத்தகத்திலும்
இடம்பிடிக்கா வரலாறு மலையகம் 200
உரிமைகளை இழந்து வாழ்ந்து வரும்
மலையகம் 200
உரிமைகளை வென்றெடுக்க முன்வராத
மலையகம் 200
இந்திய வம்சாவளி, கைக்கூலிகள் என்ற
கண்ணோட்டம் மறையா மலையகம் 200
இன்றும் எம் அடையாளத்தை நிலைநிறுத்தப்
போராடும் மலையகம் 200
காணியுரிமை காணியுரிமை என மூலைக்கு
மூலை
பேசப்படும் பேசுபொருள் மலையகம் 200
முதலாளித்துவ ஆட்சியாளர்களின்
கோரப்பிடியில்
மலையகம் 200
சமத்துவமான வாழ்க்கைக்காக எதிர்பார்த்து
காத்திருக்கும்
மலையகம் 200
செத்துமடிந்த வரலாறு மலையகம் 200
நிகழ்கால தடுமாற்றம் மலையகம் 200
எதிர்கால சூனியம் மலையகம் 200
இனியாவது மாறுமா மலையகம் 200
உரிமைகளை வென்றிடுமா மலையகம் 200.

**கண்ணன் மதுஷா**







# கேத்தி ரியானின் Office Romance

கேத்தி ரியான் (Kathy Ryan) 30 ஆண்டுகளுக்கு மேலாக நிவ்யோர் டைம்ஸ் இதழின் புகைப்பட இயக்குநராக பணியாற்றினார். அவர் அந்த இதழில் நுண்கலை புகைப்படம் (fine art photography) மற்றும் புகைப்பட இதழியல் (photojournalism) ஆகியவற்றை இணைக்கும் முன்னோடியாக இருந்தார்.


அவர் அங்கு இருந்த காலத்தில், 2011 மற்றும் 2012 ஆகிய இரு வருடங்களிலும் தேசிய இதழ் விருதுகள் உட்பட ஏராளமான புகைப்பட விருதுகளுடன் நிவ்யோர் டைம்ஸ் இதழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2012 இல், றோயல் போட்டோகிராஃபிக் சொசைட்டியின் (Royal Photographic Society) புகைப்படக்கலைக்கான சிறந்த சேவைக்கான வருடாந்த விருதினை ரியான் பெற்றார். ரியான் 2012 இல் பாஸ்டனில் உள்ள நுண்கலை அருங்காட்சியகத்தில் விரிவுரையாளராகவும் இருந்துள்ளார். காட்சிக்கலை பள்ளியில் வழிகாட்டியாகவும் சேவையாற்றியுள்ளார்.

கட்டிடத்திற்குள் புகும் ஒளியையும் வெப்பத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் வெளிபுறத்தை மூடிய வெள்ளை பீங்கான் கம்பிகளால் நிவ்யோர் டைம்ஸ் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு நாள் ரியான் அலுவலகத்துக்குள் நுழையும்போது அந்தக் கட்டிடத்துக்குள் விழும் அற்புதமான நிழல்வீச்சை காண்கிறார். உடனே அவர் தனது கையடக்க தொலைபேசியில் ஒரு புகைப்படத்தை எடுத்தார். அதனை தனது இன்ஸ்டாகிராமிலும் பதிவு செய்தார். இதுதான் கேத்தி ரியானின் நிவ்யோர் டைம்ஸ் கட்டிடத்திற்கும் சூரிய ஒளிக்கும் இடையிலான உறவில் தன்னையும் இணைத்துக்கொண்ட முதற் தருணமாகும்.

இந்த அலுவலகத்தில் நிகழும் கூட்டங்கள், காலக்கெடுவுடன் இணைந்த பணியாளர்களின் வேகமான ஓட்டம், அதீத அழுத்தத்தை கசியவிட்ட முகங்கள், உலகத்தின் உண்மைகளுக்கு அப்பட்டமான இணக்கத்தன்மை, அமைதியின் தியான நிலை போன்றவற்றை ரியான் தன் கையடக்க தொலைப்பேசியின்







**ஒரு புதுமையான புகைப்படத்தை பிரசவிப்பதற்கு விலையுயர்ந்த, கூர்மையான பார்வை கொண்ட கேமராக்கள் இருக்க வேண்டியது என்பது அவசியமல்ல என்பதை ரியானின் படைப்புகள் உணர்த்துகின்றன. கையடக்க தொலைப்பேசியிலும் சாகசங்களை புரிய முடியும்.**

வழியே அவதானிக்கலானார். இது இறுதியில் Office Romance ஆக உயிர்கொண்டது. இந்தப் புத்தகத்தில் அவர் எடுத்த ஏராளமான புகைப்படங்கள் அடுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அவை கறுப்பு மற்றும் வெள்ளையில் உள்ளன. அந்தப் புத்தகத்தின் அட்டைப்படம் கையால் எழுதப்பட்டுள்ளது. இந்தப் படைப்பு உலகத்திற்கு புதுமையை தந்தது.

ஒரு புதுமையான புகைப்படத்தை பிரசவிப்பதற்கு விலையுயர்ந்த, கூர்மையான பார்வை கொண்ட கேமராக்கள் இருக்க வேண்டியது என்பது அவசியமல்ல என்பதை ரியானின் படைப்புகள் உணர்த்துகின்றன. கையடக்க தொலைப்பேசியிலும் சாகசங்களை புரிய முடியும். இந்தக் கையடக்கத் தொலைப்பேசி சந்தர்ப்பங்களை நழுவ விடாது. அந்தச் சந்தர்ப்பங்களை கேத்தி ரியானும் நழுவ விடவில்லை.

- **ரோஹி**